விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 24
ஒலி 125 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 10 ஞாயிற்றுக்கிழமை (23.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829








நெடுந்தீவில் பயங்கரம்

# 5 வயோதிபர்கள் வெட்டிப் படுகொலை

## மூவர் பெண்கள்; இருவர் ஆண்கள்

(நெடுந்தீவு) நெடுந்தீவில் நேற்று மூன்று பெண்கள் உட்பட ஐந்து வயோதிபர்கள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நெடுந்தீவு இறங்குதுறை மற்றும் கடற்படை முகாம் அமைந்துள்ள மாவலித்துறையில் இக்கொடூரச் சம்பவம் நடந்துள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

குற்றவாளிகளை உடன் கைது செய்க

## நீதவானை வழிமறித்து நெடுந்தீவு மக்கள் போராடியதால் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்யுமாறு வலியுறுத்தி நீதவானை வழிமறித்து நெடுந்தீவு மக்கள்

▷23



## நெடுந்தீவில் ஐவர் கொலை; சந்தேகத்தில் ஒருவர் கைது

### பொலிஸார் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் ஐவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஜேர்மனியில் இருந்து திருப்பி அனுப்பட்டவர் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த சந்தேகநபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த சந்தேகநபரை ஊர்காவற்றுறை பொலிஸார்

▷23

நெடுந்தீவு கொலை

## உடனடியாக நடவடிக்கை எடுக்குக

### அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெடுந்தீவில் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸாருக்கு

▷23

## சம்பவ இடத்தில் நீதவான் விசாரணை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் நீதவான் நேற்று விசாரணை மேற்கொண்டார்.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கஜநிதிபாலன்

▷23



நெடுந்தீவு - குறிகாட்டுவான்

## படகு சேவை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையேயான படகுச்சேவை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இடம்பெற்ற படுகொலையை தொடர்ந்து குற்றவாளிகள் தப்பித்து செல்

▷23




நெடுந்தீவில் வெட்டுக்காயத்துக்கு இலக்காகி யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வரும் 100 வயது மூதாட்டி

## சடலங்கள் யாழ்.போதனாவில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் படுகொலை செய்யப்பட்ட ஐவரின் சடலங்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீதவான், சட்ட வைத்திய அதிகாரி சம்பவ

▷23

VILLAGE HOTEL
யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி
பேருந்து சேவை
இனிவரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும்
பெயரில் அதே
நிர்வாகத்தின் கீழ்
இயங்கும் என்பதை
அறியத் தருகின்றோம்

077 544 8503

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15341)

**077 814 7389, 077 986 5457**


# மும்பையை வீழ்த்தியது பஞ்சாப்



மும்பைக்கு எதிரான போட்டியில் பஞ்சாப் அணி திரில் வெற்றி பெற்றது முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 214 ரன்கள் எடுத்தது.

215 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பதிலிற்கு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 201 ஓட்டங்களை பெற்றுத் தோல்வி அடைந்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக சாம் கரன் தெரிவானார். (ம-7,9)


## நாகபூசணி திருமண சேவை

பல்லாயிரக்கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

264,ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு,யாழ்ப்பாணம்

**021 222 9306, 077 138 7596**
**071 999 9306**

(C-6409)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

**பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15341)

**077 814 7389, 077 986 5457**


# நல்லை மங்கையர்க்கரசியின்

## விழிநீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆரம்ப பிரிவு ஆசிரியை
திருமதி சிவாம்பிகை ஞானசர்மா அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர்

**பிரம்மஸ்ரீ ப:அர்த்தநாரீஸ்வரக் குருக்கள்**



பிறப்பு 1935.03.07 இறப்பு 2023.04.11

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் (C-6408)



# 1ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி

## அமரர் கதிரவேலு ஆனந்தசோதி

தோற்றம்:- 1962.06.01 மறைவு:- 2022.05.04

அன்புத் தந்தையே!
நீங்கள் எம்மைப் பிரிந்து
ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அப்பா.

அன்பினால், பண்பினால், நட்பினால்
ஆளுமையால் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எம் தந்தையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்.

விவேகானந்தா வீதி, மஞ்சத்தடி தெற்கு,
இணுவில் கிழக்கு, இணுவில்.

தங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(15339)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்; ஜிஎஸ்பி பிளஸ் இழக்கும் அபாயம்!

(கொழும்பு)

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில், இலங்கை ஜிஎஸ்பி பிளஸ் வர்த்தக சலுகைகளை இழக்கும் அபாயம் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்த நிலையில் ஆசியா மற்றும் பபிக் பிராந்தி யத்தின் ஐரோப்பிய வெளி நட வடிக்கை சேவையின் துணை நிர்வாக இயக்குனர் பொவ்லா பொம்ப லோனி, புதிய யோசனைக்கு அதிருப்தியை வெளிப் படுத்தி இலங்கை வெளியுறவு அமைச் சகத்திற்கு கடிதம் எழுதியுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

புதிய சட்டமூலத்தின் உள் ளடக்கம் தொடர்பில் அமெரிக்கா தனது அதிருப் தியை வோஷிங்டனில் உள்ள இலங் கைத் தூதுவர் மகிந்த சமரசிங்க ஊடா கத் தெரிவித்துள்ளது.

மேலும், இந்தச் சட்டமூலம் மாற்றப்பா விட்டால் முன்னுரிமை வர்த்தகம் மூலம் வர்த்தக உறவுகளில் தாக்கத்தை ஏற் படுத் தும் என இலங்கை வெளியுறவுச்செய லாளர் அருணி விஜேவர் னவிடம் இங்கி லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை தவிர, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடு களின் சில பிரதிநிதிகளும் இது தொடர் பில் தமது எதிர்ப்பை காட்டி யுள்ளதாக தெரி யவருகின் றமை குறிப் பிடத்தக்கது. (4)

# பெரமுனவிற்கு புதிய தவிசாளர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு னவின் தவிசாளராக பேராசிரியர் உத்துராவல தம்மரதன தேரர் நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பொது ஜன பெர முனவின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏக மனதாக அவருக்கு நியமனம் வழங்க ப் பட்டதாக கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2023 ஆம் ஆண்டு க்கான பொதுக்கூட் டம் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியு மான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றபோது இத்தீர்மானம் எடுக்கப் பட்டது. (4)

# மரண அறிவித்தல்

தோற்றம் 1932 - 11 - 15



மறைவு 2023 - 04 - 22

## திருமதி கணபதிப்பிள்ளை செங்கமலம்

உசனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை செங்கமலம் அவர்கள் நேற்று (22.04.2023), சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருவம்பலம் - கண்ணாத்த தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அருமை சகோதரியும் காலஞ்சென்ற கமலாம்பிகை, விமலாம்பிகை (லண்டன்), சிவப்பிரகாசம் (ஓய்வுநிலை ஆசிரியர்), சிவசுப்பிரமணியம் (ஓய்வுநிலை முகாமையாளர் - ஆ.வா.அபிவிருத்தி நிலையம், வரணி), காலஞ்சென்ற சிவானந்தசோதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அரியரட்ணம், சிவராஜா (லண்டன்), அகிலசாந்தினி, பேரின்பநாயகி (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பார்த்தீபன் (லண்டன்), கலையரசி - கபில்ராஜ், கார்த்திகா, யதுசன் - ஜனோசா, சுரேன் - ரம்மியா, சாரங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யாதவியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் உசன் ஈச்சக்காட்டு இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப் படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

(C-6413)

077 224 2006

தகவல் : குடும்பத்தினர்


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். துரைச்சாமி சையோகநாதன்

(உரிமையாளர்-வில்லையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கச்சான் பிஸ்கட் தயாரிப்பகம்)

திதி: வளர்பிறை சதுர்த்தி

தோற்றம்-01.08.1950 மறைவு-26.04.2020



ஆண்டு மூன்று ஆனது அப்பா
மாநிலத்தில் நீர் பிரிந்து
தீராத துன்பத்தில் தேம்புகின்றோம் நாம் இங்கு
எம்மைத் தவிக்கவிட்டு இமைகளை மூடிவிட்டீர்
உற்றார், சுற்றாரை அழவிட்டு இறைவனை நாடிவிட்டீர்
நீர் மறைந்த நாள் முதலாய் நிம்மதி எமக்கில்லை
தண்ணீர் இல்லாத குளத்தில் தத்தளிக்கும் மீன் போல்
நீங்கள் இல்லாத இவ்வுலகில் தவிக்கின்றோம் "அப்பா"

(15336)

76/5, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

T.P 077 312 6909

என்றும் உம் நினைவுடன்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் வாழ்வின் இறுதிக் கட்டத்தை மகிழ்ச்சியாகக் கடப்பது முக்கியமானது

## டோனி நெகிழ்ச்சி



சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன் தினம் ஐ.பி.எல் கிரிக்கெட்டின் 29 ஆவது லீக் ஆட்டம் நடை பெற்றது. இதில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி யுடன் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் பட்டிங் செய்த ஐதராபாத் அணி 134 ஓட்டங்கள் எடுத்தது.

135 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை சுப் பர் கிங்ஸ் அணி 3 விக்கெட் இழப்பிற்கு 138 ஓட்டங்கள் எடுத்து அபாரமாக வெற்றி பெற்றது. பின்னர், சென்னை சுப்பர் கிங்ஸ் கப்டன் டோனி கூறுகையில்,

"என் கிரிக் கெட் வாழ் வில் கடைசி கட்டம் இது. அதை மகிழ்ச் சியாக கடப்பது முக்கிய மானது.

செ ன னைக்கு வருவது மிகவும் மகிழ்ச்சி. ரசிகர்கள் மிகுந்த அன்பு வைத்துள்ளனர். என் பேச்சை கேட்க சென்னை ரசிகர்கள் கடைசி வரை இருக்கின்றனர்" எனத் தெரிவித்தார். (4)

# நல்லை மங்கையர்க்கரசியின்

## விழிநீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கணிதபாட ஆசிரியர்
திரு. சிவானந்தம் கணேசலிங்கம் அவர்களின்
அன்புத் தாயார்

### அமரர் சிவானந்தம் இளகேஸ்வரி



பிறப்பு 23.05.1933 இறப்பு 21.04.2023

அவர்களின் பிரிவால் துயறுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

# மரண அறிவித்தல்

## திருமதி விக்கினேஸ்வரி கனகலிங்கம்



யாழ்ப்பாணம் சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வதிவடமாகவும் கொ்ண்ட திருமதி விக்கினேஸ்வரி கனகலிங்கம் அவர்கள் 21.04.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் வீரபாகு கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் கிசாந்தன் (விடுதி மேற்பார்வையாளர் - யாழ்.மத்திய கல்லூரி), மேனுசா (தொழில்நுட்ப உதவியாளர் - யாழ்.பல்கலைக்கழகம்), கஜிந்தன் (பொலிஸ் உத்தியோகத்தர்), கஜிந்தினி (கிழக்குப் பல்கலைக்கழக மாணவி), தேனுசா (யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தாயாரும் கபேசனின் (ஆசிரியர் - கிளி/முழங்காவில் ம.வி) அன்பு மாமியாரும் மனோரதன் (சுவிஸ்), செல்வமலர் (கனடா), யோகநாதன், வசந்தாதேவி (அதிபர் - கிளி/ஸ்கந்தபுரம் இல.02, அ.த.க.பா), யோகேஸ்வரி (ஜேர்மனி), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தினி (சுவிஸ்), வல்லிபுரம் (கனடா), புஸ்பரஞ்சினி, விமலேஸ்வரன், அமரர் கிருஸ்ணானந்தன், அருள்வதனி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி பொது இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
077 069 7201

(C-6412)

# மரண அறிவித்தல்

## ஜெயந்திரன் நிஜந்தன்

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மாகாண திறைசேரி வட மாகாணம்)



தோற்றம்:- 16.07.1987 மறைவு: 21.04.2023

சபாபதி வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வட்டக்குளம் கட்டப்பிராய், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திறைசேரி வட மாகாணத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் ஜெயந்திரன் நிஜந்தன் அவர்கள் 21.04.2023 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஜெயந்திரன் (தொழில்நுட்பவியலாளர் - யாழ்.பல்கலைக்கழகம்) - செல்வகௌரி ஆகியோரின் அன்பு மகனும் பிரியங்காவின் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிராம அபிவிருத்தி திணைக்களம், வட மாகாணம்) பாசமிகு கணவரும் யோகநாதன் - றஞ்சினிதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ஜெயதர்சி, நிரூபன் (பொதுச் சுகாதார பரிசோதகர், கிளிநொச்சி), நிதுர்சன் (மாணவன் - தொழில்நுட்பபீடம், கொழும்பு பல்கலைக் கழகம்), ரிதுர்ஷிகா (உயர்தர மாணவி 2021) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கபிலன் (பிரான்ஸ்), பிரசாந் (மின் பராமரிப்பு, மேற்பார்வை உத்தியோகத்தர் Mountbreeze கொழும்பு), சாரங்கா (பணியாளர் - கருவி நிறுவனம், யாழ்ப்பாணம்) மற்றும் சோபிகா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அன்ஷிகா, அப்ஷரா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் செல்வராசா தினேஸ் மற்றும் திஷானா ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 076 7996,
074 369 5506

(15342)

தகவல்: குடும்பத்தினர்

# சென்னை சேப்பாக்கத்தில் ஐ.பி.எல் பிளே ஆப் போட்டிகள்



16 ஆவது ஐ.பி.எல் இருபது - 20 கிரிக்கெட் திருவிழா இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இதில் பங்கேற்றுள்ள 10 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு அணியும் தங் கள் பிரிவில் உள்ள அணிக ளுடன் தலா ஒரு முறையும் அடுத்த பிரிவில் உள்ள அணி களுடன் தலா 2 முறையும் மோதும்.

இதன்படி ஒவ்வொரு அணியும் மொத்தம் 14 ஆட்டங்களில் விளையாட வேண்டும். லீக் சுற்று முடி வில் டாப் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முந்தைய "பிளே-ஆப்" சுற்றுக்கு முன்னேறும். இந்நிலையில், பி.சி.சி.ஐ பிளே ஆப் மற்றும் இறுதிப் போட்டியின் அட்டவணையை அறிவித்துள்ளது.

அதன்படி, பிளேஆப் மற் றும் இறுதிப்போட்டி மே 23 முதல் மே 28 வரை சென்னை மற்றும் அகமதா பாத்தில் நடைபெறும்.

சென்னையில் மே 23 ஆம் திகதி முதல் தகுதிச் சுற்றுப் போட்டியும் மே 24ஆம் திகதி எலிமினேட்டர் போட்டியும் நடைபெறும்.


அகமதாபாத்தில் மே 26 அன்று 2 ஆவது தகுதிச் சுற்று போட்டியும் மே 28 அன்று இறுதிப் போட்டியும் நடைபெறும்.

சென்னையில் பிளே ஆப் போட்டிகள் நடைபெற உள்ளதால் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DIALOG SMART FLEET

## வசதியைப் பயன்படுத்தி எரிபொருள் வீண் விரயத்தை கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்



உங்கள் வியாபாரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு ஏற்படும் செலவுகளை குறைத்து வியாபாரத்தை சிறந்த முறையில் கொண்டு நடத்த GPS தொழில்நுட்பத்தில் உருவான DIALOG SMART FLEET இனைப் பயன்படுத்தி பலவகையான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- அனைத்து தகவல்களும் Mobile app ஊடாக
- என்ஜின் இயங்கிய கால அளவு பயணம் செய்த தூரம் ஆகியவற்றை சரியாக கணித்திடுங்கள்
- எரிபொருள் மோசடியை தவிர்த்திடுங்கள்
- வாகனத்தின் வேகம், இருக்கும் இடம், பயணம் செய்த இடங்கள் மற்றும் மேலும் பல தகவல்கள்

GPS சாதனங்களுக்கு 10% விசேட விலைக்கழிவு

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள். 0777 332 118

business@dialog.lk business.dialog.lk

Dialog ENTERPRISE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் ஏப்ரல் 25 கதவடைப்புக்கு பூரண ஆதரவு

## யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வரும் அடிப்படை மனித மாண்பையும் மனித உரிமைகளையும் புண்படுத்தும் செயல்களையும் முன்நிறுத்தி ஏற்பாடு செய்யப்படும் ஏப்ரல் 25 ஆம் திகதி ஹர்த்தாலுக்கு எமது பூரண ஆதரவை வழங்குகின்றோம் என யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கடந்த 2450 நாட்களுக்கு மேலாக வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக தீர்வு இன்னமும் கிடைத்தபாடில்லை.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களுடைய காணிகள், பயிர் நிலங்கள் இன்னமும் முழுமையாக அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை.

அரசியல் கைதிகள் இன்னும் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக பழைமை வாய்ந்த இந்து வழிபாட்டிடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

அவை திரும்பவும் பழைய நிலைக்குக் கொண்டுவரப்படாமல் காலம் இழுத்தடிக்கப்படுகின்றது. புதிது புதிதாக தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அரச மரங்களும் புத்தர் சிலைகளும் தோற்று விக்கப்படுகின்றன.

தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் பௌத்த மதம் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக அரசால் முன்வைக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மிகவும் மோசமான அடிப்படை மனித உரிமை மீறலாக உள்ளமை பலவலாக உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமை ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்பட்ட போதும் அரசு தனது பிடியைத் தளர்த்துவதாக இல்லை.

இக்காரணிகளை முன்வைத்து வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்படும் கதவடைப்புக்கு எமது முழுமையான ஆதரவை வழங்குகின்றோம் என மேலும் தெரிவித்துள்ளது. (4)

# அட்சய திருதியை முன்னிட்டு ஆர்வத்துடன் மக்கள் நகை கொள்வனவு



(யாழ்ப்பாணம்)

அட்சய திருதியை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நகைக் கடைகளில் மக்கள் ஆர்வத்துடன் தங்கத்தினை கொள்முதல் செய்வதனை காணக்கூடியதாக இருந்தது.

அட்சய திருதியை நன்நாளில் தங்கம் வாங்கினால் வீட்டில் செல்வச் செழிப்பு அதிகரிக்கும் என்பது மக்களிடையே நிலவும் ஐதீகமாகும்.

அந்தவகையில் நேற்று பெரும்பாலான கடைகளில் மக்கள் தங்கத்தினை கொள் முதல் செய்வதற்காக கூடி இருப்பதனை காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளை நகைக்கடைகளும் அலங்கரிக்கப்பட்டு இருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (4-33)

# நுங்கு விற்பனை யாழில் சூடுபிடிப்பு



(அராலி)

கற்பக விருட்சம் என அழைக்கப்படும் பனையின் நுங்கு பருவகாலம் ஆரம்பமாகிவிட்டது. யாழ். செம்மணி வீதி, அரியாலை மற்றும் யாழ். நகர் மத்திய பகுதிகளிலும் நுங்கின் விற்பனை சூடுபிடித்து காணப்படுகிறது.

அதிகரித்துக் காணப்படும் வெப்பநிலை காரணமாக உடல் சூட்டினை தணிப்பதற்காக இந்த நுங்கினை பல பயணிகள் எடுத்தும் உட்கொண்டும் வருகின்றனர்.

ஒரு நுங்கானது 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இதனை பலர் ஆர்வத்துடன் வாங்கி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. (4-104)

# மாடுகளைத் திருடி இறைச்சியாக்கி விற்பனை செய்த கும்பல் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பகுதிகளில் மாடுகளை களவாடி இறைச்சியாக்கி விற்பனை செய்த கும்பலின் முக்கிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுக் கும்பலிடம் இறைச்சியை வாங்கி விற்பனை செய்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறிய பொலிஸார், மேலும் நால்வர் தேடப்படுவதாகக் குறிப்பிட்டனர். வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த 24, 26 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர், வட்டுக்கோட்டை, அளவெட்டி, தெல்லிப்பழை, வடமராட்சி உள்ளிட்ட பிரதேசங்களில் 25 இற்கும் மேற்பட்ட மாடுகளைத் திருடி இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

5 பேர் கொண்ட கும்பல், பகலில் மோட்டார் சைக்கிளில் சென்று மாடுகளை நோட்டமிட்டு வந்து இரவில் வாகனத்தில் சென்று இரும்புச் சங்கிலி போட்டு மாடுகளை ஏற்றி வந்து கப்பூது வெளியில் வைத்து இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளது.

இறைச்சியடிக்கப்பட்ட மாடுகளின் எச்சங்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம், இரும்புச் சங்கிலி மற்றும் வாள் ஒன்றும் முதன்மைச் சந்தேகநபரிடம் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குகள் உள்ளன என்றும் பொலிஸார் கூறினர். (4-33)

# இராசிபலன்

**23.04.2023**
**சித்திரை 10, ஞாயிற்றுக்கிழமை**
**திருதியை முற்பகல் 9.22 மணிவரை**
**ரோகினி பின்னிரவு 1.55 மணிவரை**

**சுபநேரம் -9.00-10.30 மணிவரை**
**இராகுகாலம்-4.30-6.00 மணிவரை**
**சதுர்த்தி விரதம்**

**சந்திராஷ்டமம் - சித்திரை, சுவாதி**

**வளவன்**

**மேஷம்** – வார்த்தைகளால் பலரையும் கவர்வீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், போசன நன்மையுண்டு.

**துலாம்** – எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, கௌரவக் குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மகரம்** – கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமாக ஆதாயம் கிடைக்கலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** – கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** – உற்சாகமான செயற்பாடுகளால் காரியம் சாதிப்பீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், அந்நியர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** – மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மிதுனம்** – காரிய அலைச்சல்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, தேவையற்ற மனக் குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி** – தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்-நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.

**தனுசு** – சுவாரஸ்யமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர்-நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** – பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

அடிமையைப் போல உழைப்பவன் அரசனைப் போல உண்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் பெரிதும் பாதிக்கப்பட்டது தமிழ் இனமே. இன்று வரை அதன் தாக்கம் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது.”**




# தமிழினத்தை பாதித்த பயங்கரவாத தடைச்சட்டம்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் எனும் பதம் தற்போது நாட்டில் அதிகம் உச்சரிக்கும் ஒரு சொல்லாக மாறியிருக்கின்றது.

ஒரு காலத்தில் தமிழினத்தின் மீது மட்டும் பாய்ந்த இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பெரும்பான்மையினரும் பெரும்பான்மை அரசியல் வாதிகளும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டனர்.

ஆயினும் அது இப்போது சிங்கள மக்களையும் பதம் பார்க்கும் கத்தியாய் மாறிய பின் அதற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

ஆம், தமிழினம் தனிநாடு கேட்டுப் போரிட்டது எதனால் என்ற யதார்த்தத்தைபுரிந்து கொள்ளாத பெரும்பான்மை அரசுகள் ஒட்டுமொத்த தமிழினத்தின் மீதும் காழ்ப்புணர்ச்சி கொண்டு தமிழினத்தை அழித்தது மட்டுமன்றி அவர்களை அடக்கி ஒடுக்கி தமது காலில் பணியச் செய்துவிட வேண்டும் என துடித்தனர் என்பதுதான் உண்மை.

அதற்கு அவர்கள் பாவித்த கருவிதான் பயங்கரவாதத் தடைச் சட்டமூலம். இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்ட மூலத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டது தமிழினம் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.போர் நிறைவு பெற்று 14 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் இன்றுவரை தமிழினம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டு சிதில மடைந்து கொண்டுதான் இருக்கிறது.

ஒருவரை நீதிமன்றில் முற்படுத்தி வளக்குப் பதிவு செய்யாமல் பாதுகாப்புத் தரப்பினால் தடுத்து வைக்கப்பட்டது. விசாரணைக் குட்படுத்தும் மிகக் கொடுமையான சட்ட மூலம் இந்த பயங்கர வாதத்தடைச் சட்டமாக இருக்கும் இவ் வேளையில் இன்று வரை அரசியல் கைதிகள் என்ற அடைமொழியுடன் சிறைகளில் தவித்துக் கொண்டிருக்கும் எம் தமிழ் சொந்தங்களின் நிலையை நாம் சொல்லித்தான் புரிய வேண்டியதில்லை.

இவ்வாறான கொடிய பயங்கரவாத தடைச் சட்டமூலத்தின் பாதிப்பை சிங்களவர்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பார்பாட்டத்தின் பின்னரே உணர்ந்து கொண்டனர்.

அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியவர்கள், வன்முறை களைத் தூண்டியவர்கள், வன்முறையைத் தூண்ட உதவியவர்கள் என பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இம்முறை சிங்கள இனத்தின் பக்கம் திருப்பியது அரசு.

அதன் பின்னரே பயங்கரவாத தடைச் சட்ட மூலத்தின் கோர முகத்தைப் புரிந்து கொண்டனர் பெரும்பான்மை சிங்கள மக்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் பயங்கரவாத தடைச்சட்ட மூலத்தின் கொடுமையை அனுபவித்த சிங்களவர்கள் அதற்கு எதிராக இவ்வாறு கொதிக்கிறார்கள், ஆனால் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக பயங்கரவாத தடைச் சட்ட மூலத்தின் மூர்க்கத்தனத்துக்குள் முக்குளித்த தமிழினத்தின் நிலையை எண்ணிப்பார்த்தால் மனம் நொந்து போகிறது.

“ அரசாங்கத்தின் மிருகத் தனத்தை ஒன்றிணைந்து தோற்கடிப் போம் ” என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பயங்கர வாத தடைச் சட்ட மூலத்தை பாராளுமன்றில் நிறைவேற்ற முற்படும் அரசுக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கின்றார்.

நிலை இதுவாக இருக்கையில் அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பயங்கரவாத தடைச் சட்டத்தில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கான எச் சந்தர்ப்பமும் இல்லை எனக் கூறியிருக்கின்றார்.

உலக நாடுகள் அனைத்தும் எதிர்க்கும் பயங்கரவாதத் தடைச் சட்ட மூலத்தை எப்படியாவது பாராளுமன்றில் நிறைவேற்றி விட வேண்டும் என அரசாங்கம் துடிப்பதற்குள் இருக்கும் சூட்சுமத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் இன்றிய நாடாக மலர்ந்திருக்கும் தொங்கு பால ஆட்சியைக் கொண்ட இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக யார் எழுந்தாலும் அவர்களின் உச்சியில் மடத்தலினால் அடிக்கும் சக்தியாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை பயன்படுத்த முற்படுகிறார்களோ எனும் ஐயம் மக்களிடம் எழுந்துள்ளது. பயங்கரவாத தடைச் சட்ட மூலத்திற்கு எதிராக வடக்கில் கடந்த வியாழக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டம் பரவலாக நடை பெற்றிருந்தது.

இங்கு தான் நாம் ஒன்றைப் புரிந்து செயற்படுத்த வேண்டும். அதாவது இந்திய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை எப்படியாவது இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தும் வகையிலான நகர்வுகளை இந்தியாவினூடே மேற் கொள்ள வேண்டும்.

இலங்கை அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை அமுல்படுத்த முற்படும் இவ்வேளையில் இந்தியா 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை அமுல்படுத்துமாறு இலங்கை அரசை அழுத்தினால் அது ஓரளவு வெற்றியைத் தரக் கூடியதாக அமையும்.

இலங்கை அரசு 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை அமுல்படுத்த பின்னிப்பதன் காரணம் தமிழினத்துக்கு ஆட்சி அதிகாரங்கள் கிடைத்துவிடும் என்பதனாலேயே.

இந்த ஒற்றை உண்மையை இந்தியாவுக்குப் புரிய வைத்து விட்டால் அனைத்தும் சுபம் ஆனாலும் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதில்தானே சிக்கலே உண்டு. எம் தமிழ் அரசியல் தலைவர்களோ தமது சுயநல அர்சியல் நிகழ்ச்சி நிரலுக்குள் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள போரிட்ட ஒரு இனம் தோற்கடிக்கப்பட்டு உரிமைகளையும் உடமைகளையும் இழந்து தவித்துக் கொண்டிருக்கிறது. கிடைக்கக் கூடிய உரிமையையேனும் பெற்றுத்தர இந்தியா துணை நிற்க வேண்டும். இல்லையேல் இலங்கை சிங்கள - பௌத்த நாடாகும் காலம் வெகு சீக்கிரம் நடந்தேற வாய்ப்புண்டு.

- அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனை தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனை வரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உப அதிபராக இருந்து ஓய்வு பெற்ற சிவசுப்பிரமணியசர்மா அவர்கள் காலமாகி விட்டார்.

நல்ல மனிதர். யாழ். இந்துக் கல்லூரியில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய ஒரு சிறந்த ஆசிரியர்.

அவரது மரணச் செய்தியறிந்து மிகுந்த துயரமடைகின்றோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற.

அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக்குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

அது சரி எங்க இன்னமும் கங்காணியாரைக் காணவில்லை.என்ன சங்கதியோ!

**மூப்பர்**-நெருப்புப் போல வெயில் கொட்டுது. பங்குனி மாதத்தில பகல் வழிப் போறவர்களைப் பார்க்கிறதே பாவம் எண்டொரு பழமொழி எங்களிட்ட இருக்குது.

ஆனால் இப்ப சித்திரை மாதம் பிறந்தும் இன்னமும் வெயில் தணிந்த பாடில்லை.

இந்த வெய்யில் களைப்பில கங்காணியார் நித்திரை கொள்ளுவார் போல...

இவ்வாறு மூப்பர் கூறி முடிக்க, அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயன் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**சாத்திரியார்**-என்ன கங்காணியார் இண்டைக்கு லேற்றாப் போய்ச்சுது. என்ன சங்கதி?

**கங்காணி**-அதை ஏன் கேக்கிறியள். எங்கட வீட்டில இருக்கிற எல்லா செவ்விளனி தென்னைகளிலும் ஒரே வெள்ளை ஈ. தென்னை ஓலைகளெல்லாம் பழைய ஓயில் பூசின மாதிரி இருக்குது.

தென்னை ஓலையின் கீழ்ப் பக்கத்தில,இலட்சக்கணக்கில இருக்கிற வெள்ளை ஈக்களின்ர எச்சங்கள்; மரத்தின்ர கீழ் ஓலைகளின் மேற்பரப்பில



## அப்ப,ஆனைப்பந்தியிலும் பிரித் (து) ஓதப்படுமோ

விழ, அதால ஏற்படுகின்ற பங்கசுகளின் தாக்கத்தினால் ஓலையின் பச்சைத் தன்மை மூடப்படுகுது. இந்த நிலைமை கூடிச் சென்றால் தென்னை மரங்கள் பட்டுப் போகும்.

**சிறாப்பர்**-எங்கட மண்ணில தென்னம் ஈ வேகமாக பரவுகிற போதிலும் அது பற்றி நாங்கள் கவனிச்சால் தானே!

**பண்டிதர்**-இந்தியாவில தென்னை ஈ தொற்று வேகமாகப் பரவின போதிலும் அதனை ஒரு மாதிரியாகக் கட்டுப்படுத்திப் போட்டினம்.

ஆனால் எங்கட நாட்டில இன்னமும் வெள்ளை ஈ தொற்று வேகம் எடுத்துக் கொண்டு தான் இருக்குது. இது விடயத்தில சம்பந்தப்பட்டவர்கள் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் எங்கட தென்னை வளத்தை நாங்கள் இழக்க நேரிடும்.

(இவ்வாறு பண்டிதர் கூறியதும் விறுக்கென வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார்.)

**வாத்தியார்**- என்னைப் பொறுத்த வரையில வெள்ளை ஈ தொற்றை கட்டுப்படுத்து கிற வேலைத்திட்டத்தை எங்கட தென்னைப் பயிர்ச் செய் கைச் சபை வேகப்ப டுத்த வேணும். அதோட யாழ். பல்கலைக் கழக விவசாய பீடம் மற்றும் விவசாய திணைக்களங்கள் இது விடயத்தில கள மிறங்கி தென்னைகளைப் பாதுகாக்க வேணும் எண்டு ஆலடியில தீர்மானம் எடுப்பம் என்று கூற, மேற்படி தீர்மானம் ஆலடி யில் ஏகமனதாக நிறை வேறியது. இதனைத் தொடர்ந்து ஆலடியில் நிசப்தம் நிலவ, அதனைக் கலைப்பது போல கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி**-வலி வடக்கு பிரதேச சபையின் மல்லாகம் அலுவலகத்தில் கடமையாற்றிய விஜிதா என்ற பெண் பிள்ளை தீயில் எரிந்து உயிரிழந்தார்.அவரின் இறப்பு தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றொரு தீர்மானத்தை ஆலடியில எடுக்க வேணும்.

மரணம் எப்படி நடந்தது என்பது பற்றி சரியான விசாரணை நடத்தப்பட வேணும். ஏனென்றால் விஜிதாவின்ர மரணத்தில அவருடைய பெற்றோர்களும் உறவுகளும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தவிர, பத்து வயதில ஒரு பெண் பிள்ளை விஜிதாவுக்கு இருக்கிறார். அந்தப் பிள்ளை தனது தாயை இழந்து தவிக்குது.அதேநேரம் அரசியல் செல்வாக்குகள் காரணமாக உண்மை மறைக்கப்படுவதாகவும் சந்தேகிக்கிற சந்தர்ப்பங்களும் உண்டு. எனவே தான் எதுவாக இருந்தாலும் உண்மை வெளிப்பட வேண்டும்.

**விதானையார்**-இஞ்சே கங்காணி யார். எங்கட அரசியல் எப்படி இருக்குது எண்டு பார்த்தியளோ. அரசியலில இருக்கிறவியல் எவ்வளவு நேர்மையாக இருக்க வேணும்.

ஆனால் நடந்த தைக் கண்டியள் தானே. இப்ப மாவை ஐயா என்ன சொல்லப் போறார்.

**சாத்திரியார்**- விதானையார் இப்ப எங் கட தமிழர் தாயகத்தில பல்வேறு அர சியல் நடக்குது.

இந்தாப் பாருங்க யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில ஓர் ஆதீனம் அண்மையில திறக்கப்பட்டிருக்குது.

அதில சிவலிங்கமும் புத்தர் சிலையும் வைக்கப்பட்டிருக்குது. என்ர கேள்வி என்னெண்டால், இந்த ஆதீன திறப்பு விழாவில ஒரு சில சைவ மக்கள் மட்டும் பங்குபற்ற, பௌத்த துறவிகள் பலரும் பங் கேற்றது ஏன் என்பது தான் புரியாமல் உள்ளது.

**சிறாப்பர்**-அப்ப இனி யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியிலும் பிரித்தோதப்படும் எண்டு சொல்லுறியள்.

**வாத்தியார்**- அநேகமான சமயத் தலைவர்களும் சமயா சாரங்களைப் பின் பற்றுவதாகக் காட்டிக் கொள்பவர்களும் கடவுள் இல்லை எண்ட நினைப்போட செயற்படுகினம்.

ஆனால் இதற்கெல்லாம் எப்பவோ ஒரு நாள் பதில் கூறித் தான் ஆக வேணும்.

**சாத்திரியார்**- என்ன இருந்தா லும் எங்கட தமிழ் மக்கள் சமயத்தால பேதப்படக்கூடாது என்பது தான் என்ர விருப்பம்.

**வாத்தியார்**-எங்களிட்ட சமய பேதம் ஒருபோதும் இருக்கவில்லை. என்ன செய்யிறது மன்னார் திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவை, தள்ளி விழுத்தி நந்திக் கொடியைச் சப்பாத்துக் காலால் உழக்கிய போது தான் சைவ மக்கள் அதிர்ந்து போயிற்றினம்.

பரவாயில்லை. இப்பவும் தமிழ் மக்களிட்ட சமயப் பேதம் இல்லாமல் இருக்க வேணும் எண்டு மன்னார் ஆயர் இல்லம் நினைத்தால், தள்ளி விழுத்தின திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவை நிரந்தரமாகக் கட்டுவதற்கு உடன்பட வேணும். இதை விட்டிட்டு மன்னாரை மறை மாவட்டமாக்க நினைத்தால், அது பேரழிவாகத் தான் இருக்கும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்த நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க அனைவரும் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்டன் மகன் திரைப்படத்தில் தந்தை நாசர் போல தந்தை இருப்பது நல்லதா வியாசரே?

**ஆர்.கே.எஸ் — யாழ்ப்பாணம்**

**அடிக்கிற வெயிலை பார்த்தால் நாம் ஆபிரிக்கக்காரர்களாய் ஆகிவிடுவோம் போல இருக்கிறதே?**

தண்ணீரை நிறையக் குடியுங்கள், அநாவசியமாய் வெயிலில் திரிவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
வயதானவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ளுங்கள்.
அடிக்கடி நீராகாரம் எடுத்துக்கொள்வது நீரிழப்பினைத் தடுக்கும்.
இது வெப்பம் நிறைந்த காலம் தான். ஆனாலும் வழமையிலும் தற்போது அதிக வெப்பம் நிலவுகிறது.
ஆதலால் நாம் அவதானமாய் இருப்பதே சிறந்தது.
சரி ஆபிரிக்க விடயத்துக்கு வருவோம். தம்பி இப்போதே ஆபிரிக்கா காரன் போல தானே இருக்கிறோம். இதன் பின் என்ன ஆகிவிடப் போகுது.

**சங்கரசிவன் — வதிரி**

**மதங்களைப் பார்க்காது மனங்களைப் பார்க்கும், இனங்களைப் பார்க்காது இதயங்களைப் பார்க்கும் அரசியல் வாதிகள் எமது நாட்டில் இருக்கிறார்களா வியாசரே?**

இது ஒரு நல்ல கேள்விதான். ஆனால் இப்படிப் பட்டவர்களை நாம் கற்பனை செய்து தான் பார்க்க வேண்டும்.
எங்கு இடம் கிடைக்கிறது அங்கு புத்தர் சிலை வைக்கலாம் என்றும் எங்கு வரலாற்றுச் சின்னங்கள் புதைந்து கிடக்கிறது. அது பௌத்த பூமி என்று வரலாற்றை மாற்றலாம் எனும் மனநிலை கொண்டவர்களுடனேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
ஏனெனில் எம்மிடம் வரலாறும் இல்லை. இருந்த வரலாற்றை மாற்றி அமைக்க விட்டுவிட்டு அமைதியாய் இருந்து விட்டோம். இனிப் பேசிப் பயனேதும் ஆகிவிடப் போவதில்லை.

**திகான் — வடமராட்சி**

**ஒரு குரங்கிற்கு ஐம்பதாயிரம் செலவிடும் சீனாவின் கரிசனை என்னவாக இருக்கும் வியாசரே?**

குரங்குகளை சீனா எதற்காக கேட்கிறது என்பது தெரியவில்லை. இந்தச் செய்தி வந்ததுதான் தாமதம் குரங்குகளை வைத்து சமூக வலைத்தளங்கள் இலங்கையைக் கிழி கிழி என கிழித்து விட்டது.
சிலர் குரங்குகளை சீனா இறைச்சிக்காக வாங்குகிறது என்கின்றனர். சிலர் மருத்துவப் பரிசோதனைக்காக என்கின்றனர். இன்னும் சிலரோ இராணுவப் பயிற்சி வழங்குவதற்காக என்கின்றார்கள்.
ஆனால் இலங்கை அரசோ மிருகக்காட்சிச் சாலைகளுக்காக என்கின்றது.
அடக்கடவுளே குரங்குகளுக்குள் இப்படியொரு வியாபாரம் இருக்கிறது என்பது இலங்கை அரசுக்கு இப்போதுதான் தெரிந்தது போல. முன்பே தெரிந்திருந்தால் இன்று குரங்கு இனம் இலங்கையில் இல்லாத இனமாகியிருக்கும்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**ரம்ஜா — மானிப்பாய்**

**நாம் நல்லது செய்தாலும் நம்மை வெறுப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்களே?**

மயிர் கொட்டியைப் பார்த்து அருவருப்புப்படும் அனைவரும் வண்ணாத்துப்பூச்சியை கைகளில் வைத்து மகிழ்வர்.
இதுதான் உலக நியதி. நம்மை இன்று வெறுப்பவர்கள் நாளை நம்மைப் புகழ்வார்கள்.
இன்று நம்மைப் புகழ்பவர்கள் என்றோ ஒரு நாள் எம்மை இகழ்ந்தவர்களே.
ஆதலால் நாம் எதைப்பற்றியும் கவலைப்படாமல் நமது பாதையில் உண்மை, நேர்மை என்ற நேர் கோட்டில் சென்றால் இறைவன் எம்முடன் கூடவே இருப்பர். இதுவே சர்வ நிச்சயம்.

**மதுவன் — மீசாலை**

**அன்று தந்தை செல்வா கூறினார் தமிழர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என இன்று கடவுளை யார் காப்பாற்றுவது வியாசரே?**

தந்தை செல்வாவின் பின் ஈழத்தமிழினத் துக்கு ஒரு அர்ப்பணிப்பு மிக்க தலைவன் கிடைக்கவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.
அதன்பின் வந்த தலைவர்கள் அனைவரும் தம்மைத் தலைவர் என்று கூறுவதிலும் தமது சுய நலனுக்காக அரசியல் நடத்தவும் தலைப்பட்டனர்.
இதன் விளைவே இன்று தமிழினம் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறது.
இந்நிலை மாற வேண்டுமானால் எம் தமிழ் அரசியல் தலைவர்கள் மாறவேண்டும். அவர்கள் மாறுவார்கள் என்ற நம்பிக்கையை குழிதோண்டிப் புதைத்து பல வருடங்கள் ஆகிவிட்டது. இப்போது தமிழினத்திற்கு நல்ல தலைவரும் இல்லை, கும்பிட கடவுளும் இல்லை.



ஒரு குரங்கிற்கு ஐம்பதாயிரம் செலவிடும் சீனாவின் கரிசனை என்னவாக இருக்கும் வியாசரே?

**தர்கித் — யாழ்ப்பாணம்**

**எம்டன் மகன் திரைப்படத்தில் தந்தை நாசர் போல தந்தை இருப்பது நல்லதா வியாசரே?**

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே, தாலாட்டுப் பாடும் தாயின் அன்பு தந்தை அன்பின் பின்னே. இது கவிஞர் நா.முத்துக்குமாரின் கவிவரிகள்.
தந்தையானவர் எப்போதும் தன் பிள்ளை களின் வாழ்வின் உயர்வுக்காக தன்னை ஓடாய்த் தேய்க்கும் தியாகி.
தன் பிள்ளைகள் வாழ்வில் நன்றாக இருக்க வேண்டும் எனும் அக்கறையில் கண்டிப்பாய் இருப்பர்.
அது அந்த நேரத்தில் எமக்கு கஷ்ரமாய் இருக்கும். நாம் தந்தையாகும் போது அவரின் செயற்பாடுகள் அனைத்தும் நியாயமானதாய் உணர்ந்து கொள்வோம். தந்தை என்ற சொல் மந்திரம். இதுவே நிரந்தரமானது.

**சுதன் — குப்பிழான்**

**சிவபூமியாய் இருந்த இலங்கை இப்போது எப்படி இருக்கிறது வியாசரே?**

முதலில் நாம் ஒவ்வொருவரும் ஒரு விடய த்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது எனது அம்மம்மாவின் அம்மா எந்த மதத்தைச் சார்ந்திருந்தவர் என சிந்தித்தால் முடிவு சைவ சமயமானதாகவே இருக்கும்.
சைவம் தமிழினத்தின் பூர்வீகம். தமிழ் எங்கள் மொழி. சைவம் எங்கள் வழி என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
மத மாற்றங்கள் மனக்கசப்புக்களை ஏற்படுத்தக் கூடியவை. இது ஒரு புறமிருக்க, எங்கு அரச மரம் நிற்கிறதோ அங்கு புத்தர் இருந்த இடம் என்ற கோட்பாட்டுடன் பெரும்பான்மையினர் சுற்றித்திரிகிறார்கள்.
இவை அனைத்தையும் சமாளித்து எமது தாய்ச் சமயத்தை பாதுகாக்க வேண்டியது எமது அனைவரினதும் பொறுப்பு.

**தக்ஷித் — மந்துவில்**

**நாட்டில் நடப்பதைப் பார்த்தால் என்ன என்றே புரியவில்லையே வியாசரே?**


இலங்கையில் தேர்தல் நகைச்சுவைக் குரிய விடயமாக மாறிவிட்டதாய் சமீபத்தில் பப்ரல் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.
அந்தளவிற்கு தேர்தல் தொடர்பில் அரசாங்கம் தீர்க்கமான முடிவின்றி செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.
மறுபுறம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பாராளுமன்றில் நிறைவேற்ற படாப்பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.
நாடு இருக்கும் நிலையில் இப்போது பயங்கரவாத தடைச்சட்டம் எதற்கு என்பதுதான் மக்களின் கேள்வியாகவும் இருக்கிறது.
வீட்டுத் தோட்டத்தைச் செய்யுங்கள், விவசாயத்தை செய்யுங்கள் எனக் கூறவேண்டிய நேரத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நிறைவேற்றத் துடிப்பது ஏன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சமயோசித யுக்தியால் உயிர் தப்பிய நாய்



**ஒரு** காட்டில் காட்டுநாய் ஒன்று சுற்றித் திரிந்து கொண்டு இருந்தது. அப்போது ஒரு சிறுத்தைப்புலி தன்னை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்ததை அந்த காட்டுநாய் பார்த்தது. நாயை பிடித்து தின்ன வேண்டும் என்பதுதான் சிறுத்தைப் புலியின் நோக்கம். எப்படி அதனிடம் இருந்து தப்பி செல்வது என்பது காட்டு நாயின் கவலை.

ஓடிச்செல்வதால் பயனில்லை. ஏனென்றால் எவ்வளவு வேகமாக ஓடினாலும் சிறுத்தைப்புலியின் அளவுக்கு காட்டு நாயால் வேகமாக ஓட முடியாது. எனவே காட்டு நாய் உடனே மிக வேகமாக யோசிக்க தொடங்கியது. அருகில் சில எலும்புகள் கிடந்தன. அவற்றை பார்த்தும் உடனே அந்த காட்டு நாய்க்கு ஒரு யோசனை பிறந்தது.

சிறுத்தைப்புலியின் பக்கம் தன் முதுகை திருப்பிக்கொண்டு கீழே அமர்ந்து அந்த எலும்புகளை மென்று தின்பதுபோல் கடிக்க ஆரம்பித்தது. சிறுத்தைப்புலி அருகில் வந்து தன் மீது பாய்வதற்கு தயாரானபோது காட்டு நாய் உரத்த குரலில் சொன்னது.

"இப்பேர்து நான் தின்று முடித்த சிறுத்தைப்புலி மிகவும் சுவையாக இருந்தது. அக்கம் பக்கத்தில் வேறு சிறுத்தைப்புலி கிடைக்குமா? என்று தேடிபார்க்க வேண்டும்" என்றது.

இதைக் கேட்டதும் பயந்து போய் சிறுத்தைப்புலி அப்படியே ஸ்தம்பித்து சிலை போல் நின்று விட்டது. இந்த காட்டு நாய் சிறுத்தைப்புலிகளையே கொன்று தின்று விடுகிறதே. அப்படியானால் எவ்வளவு பலம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும். இதனிடம் அகப்படாமல் தப்பி சென்றுவிட வேண்டும் என்று நினைத்து ஓசைபடாமல் பின்னோக்கி சென்று அந்த சிறுத்தைப்புலி புதருக்குள் மறைந்து விட்டது.

அருகில் இருந்த ஒரு மரத்தின் மீது உட்கார்ந்து இருந்த ஒரு குரங்கு நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தது. தனக்கு தெரிந்த தகவலை சிறுத்தைப்புலியுடன் பகிர்ந்து கொண்டு சிறுத்தைப்புலியுடன் பேரம் பேசி தனக்கு பாதுகாப்பு தேடிக்கொள்ளலாம் என்று அந்தக் குரங்கு கருதியது. எனவே சிறுத்தைப்புலியை பின் தொடர்ந்து அந்தக் குரங்கு வேகமாக ஓடிச்சென்றது. காட்டு நாயும் இதை கவனித்தது. ஏதோ சதி நடக்கிறது என்பதை புரிந்து கொண்டது.

குரங்கு, சிறுத்தைப்புலியிடம் சென்று காட்டு நாய், சிறுத்தைப்புலியை எப்படி ஏமாற்றியது என்ற முழு விபரத்தையும் சொன்னது. சிறுத்தைப்புலிக்கு தாங்க் முடியாத கோபமும் ஆத்திரமும் வந்தது. அந்த காட்டுநாய் என்னையே ஏமாற்றலாம் என்று நினைக்கிறதா? அதற்கு மறக்க முடியாத பாடத்தை புகட்டுகிறேன்.

"இந்த காட்டில் யார் யாரை கொன்று தின்பார்கள் என்பதை காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டு. "குரங்கே வா. என் முதுகில் ஏறி உட்கார். 2 பேரும் அந்த காட்டு நாயை பிடிக்கலாம்" என்றது. குரங்கு, சிறுத்தைப்புலியின் முதுகில் ஏறி உட்கார்ந்தது.

இரண்டும் நாயை நோக்கி சென்றன. சிறுத்தையும் குரங்கும் சேர்ந்து வருவதை காட்டுநாய் பார்த்தது. இந்த திருட்டு குரங்கு என்னை இப்படி ஆபத்தில் மாட்டி விட்டதே இப்போது என்ன செய்வது? என்று அந்த காட்டு நாய் யோசித்தது. அப்படி யோசித்ததே தவிர, அதற்காக அந்த காட்டுநாய் பயந்து ஓடவில்லை.

அந்த சிறுத்தையையும் குரங்கையும் பார்க்காத மாதிரி நடித்து அவைகளுக்கு தன் முதுகை காட்டிக் கொண்டு தரையில் அமர்ந்தது. அவை அருகில் நெருங்கியதும் அந்த காட்டுநாய் உரத்த குரலில் சொன்னது. "அந்த போக்கிரி குரங்கு எங்கே போய்த் தொலைந்தது. அதனை நம்பவே முடியாது. நான் இன்னொரு சிறுத்தைப்புலியை சாப்பிடுவதற்கு பிடித்துக்கொண்டுவா என்று சொல்லி அனுப்பி அரை மணிநேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அந்த குரங்கை காணோமே?" என்றது.

காட்டுநாய்சொன்னதை கேட்ட சிறுத்தைப்புலி தன் கோபம் முழுவதையும் குரங்கின் மீது திருப்பியது. அதனை கடித்துக் குதறி கொன்று தின்று விட்டது. **நீதி:** வாழ்க்கையில் பல பிரச்சினைகள் வரலாம். ஆபத்துக்கள் வரலாம். பிரச்சினைகளை நேருக்கு நேர் சந்தியுங்கள். வெல்லலாம்

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 04


## எழுத்தும் - எழுத்தாளரும்

**இ**ந்த அலங்காரச் சக்தி படாமல் அவரும் கூடத் தன் பாதங்களைப் பத்திரப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

இதோ அவருடைய சத்துள்ள வாசகங்களையே சாட்சிக்கு அழைக்கிறேன்.

"இசையலங்கார உரை நடைமீது எனக்கிருந்த மோகத்தைக் "கோரலெங்கோ" வால் கூட அகற்றிவிட முடியவில்லை.

ஐந்து ஆண்டுகள் கழித்து



"ஆர்கிப் தாத்தா" என்கிற என் கதையை புகழ்ந்த போதும் கவிதையின் சாயலுள்ள உரை நடையைக் கையாண்டு கதையை நான் அழகுபடுத்தியிருக்கக் கூடாது என்று சொன்னார்.

அவர் சொன்னதை முதலில் நான் நம்பவில்லை.

ஆனால், சமவெளி வீட்டில் வந்து கதையைப் படித்த போது, பிரதேசத்தில் மழை பொழிவதை வர்ணிக்கிற ஒரு பக்கம் முழுவதும் அந்தச் சாபக்கேடான 'இசையலங் கார" நடையில் எழுதியிருப்பதைக் கண்டு வருத்தப்பட்டேன்.

வெகுகாலம் வரைக்கும் என்னை விட்டு ஒழியவில்லை.

வேண்டாத போதிலும் அது என் கதைகளினூடேகசிந்தோடத்தான் செய்தது.

பொதுவாகச் சொன்னால் நான் ஓர் "அலங்கார" நடையைத் தாள் பிரயோகித்து வந்தேன்.

இதோ ஓர் உதாரணம் :

"முகத்தில் புன்னகையாட அந்த லாந்தர் கம்பத்தைக் கட்டிக் கொண்டு அசைந்தாடும் தனது நிழலைப் பார்த்தபடியே அந்தக் குடிகாரன் நின்றிருந்தான்."

இடையே ஒரு வார்த்தை அது நிலவொளிக்கும் இரவு: காற்றின் சலனமே இல்லை" என்று நானே . வர்ணித்திருந்தேன்.

அப்படிப்பட்ட இரவுகளில் தெரு விளக்கை யாரும் போடுவதில்லை.

மேலும், காற்றில்லாவிடில் அந்த மனிதனின் நிழல் ஆடாமல், அசையாமல் அப்படியே இருக்குமல்லவா?

இப்படிப்பட்டகுறைபாடுகளும் தவறுகளும் என்கதைகள் ஒவ்வொன்றிலும் இருந்தன. அதற்காக என்னை நானே கடுமையாகப் பழித்துக் கொள்வதுண்டு.".

கவிதை எழுத முயன்று தோற்றுப் போன கார்க்கி தனக்குள் பூட்டி வைத்திருந்த உணர்ச்சிகளை உரைநடைக்குள் திறந்து விட்டார்.

அவரே பின்னாளில் அது உரை நடையைச் செழிக்க வைப்பதற்கு மாறாகக் கொழுக்க வைத்து விடுகிறது என்றுணர்ந்தார்.

அது தவறு என்று கண்டு தன்னைத் தானே தண்டித்துக் கொண்டார். மேலும் கார்க்கியின் குரலைக் கேட்டுப் பாருங்கள்:

இவை அற்பமான தவறுகளாகத் தோன்றக் கூடும் என்றாலும் அவை முக்கியமாகும். ஏனெனில் கலையின் உண்மையை அவை மீறுகின்றன.

பொதுவாகச் சொல்வதென்றால் குறைவான சொற்களில் அதிகமான விடயத்தை வெளியிடும் கச்சிதமான சொற்களைக் கண்டுபிடித்துப் பிரயோகிப்பது ஒரு கடினமான வேலையாகும். சொற்செட்டும் இருக்க வேண்டும்.

அதே சமயத்தில் கருத்துக்கு எல்லையுள்ள விரிவும் வீச்சும் தர வேண்டும் என்பதும் கடினமான வேலைதான்." ஓர் எழுத்தாளன் தன் எழுத்துக்கு எவ்வளவு சக்தியமாய் இருக்க வேண்டும் என்பதற்குக் கார்க்கியின் வரிகளே கட்டளைக் கல்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவிகளை பலி வாங்கும் இராணுவங்களின் அதிகார மோதல்

மன்னராட்சியோ, காலனியாட்சியோ, ஜனநாயக ஆட்சியோ அல்லது இராணுவ ஆட்சியோ... அதிகாரம் அத்தனை எளிதாக ஒருவரின் கைகளில் கிடைப்பதில்லை. அதிகாரத்தின் பலன்கள்அனைத்தும் வலிமையின் கரங்களுக்கு மட்டுமே செல்கின்றன. ஆனால், அதன் அனைத்து விளைவுகளும் பாதிப்புகளும் அதில் பகடைக்காய்களாக உருட்டப்படும் பொதுமக்களுக்கு மட்டுமே. அது இன்றளவும் நடந்து கொண்டு தான் இருக்கிறது என்பதை கண் முன்னே காட்டும் விதமாகத்தான், கடந்த சில தினங்களாக சூடானில் அதிகார மோதலுக்கிடையில் மரணங்களின் ஓலக் குரல் கேட்டு வருகிறது.

இராணுவ ஆட்சி நடைபெற்று வரும் சூடானில், தற்போது ஆட்சியிலிருக்கும் இராணுவப் படைக்கும் அதன் துணை இராணுவப் படையான Rapid Support Forces என அழைக்கப்படும் ஆர்.எஸ்.எஃப் இற்கும் அதிகார மோதல் நிகழ்ந்து வருகிறது. தலைநகர் கார்டோமில் (Khartoum) ஆரம்பித்த இந்த மோதல் தற்போது நாட்டின் பல்வேறு நகரங்களில் பரவிக் கொண்டிருக்கிறது. நாளுக்குநாள் தீவிரமடையும் இந்த மோதலில் இதுவரை மட்டும் 200 இற்கும் மேற்பட்டோர்கள் பலியாகியிருப்பதாகவும் 1,800 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய அதிகார மோதல் என்பது இன்றைக்குத் தொடங்கியதல்ல, பல தசாப்தங்களுக்கு முன்னரே தொடங்கி விட்டது. அதை அரங்கேற்றிக் கொண்டிருக்கும் கைகள் மட்டும் மாறிக் கொண்டிருக்கிறது.

விளை நிலங்கள், எண்ணெய் வளம் எனப் பல வளங்களைக் கொண்டிருக்கும் சூடான், வடகிழக்கு ஆபிரிக்காவில் மூன்றாவது பெரிய நாடாகும். பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திலிருந்த சூடான் 1956 இல் விடுதலை பெறுகிறது. இந்த நாட்டில் இஸ்லாமியர்களே பெரும் பான்மையாக இருக்கின்றனர். ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு அரசியல் கட்சிகள் ஆட்சியும் நடந்து வந்தது. அவ்வப்போது கிளர்ச்சி நிகழ்ந்த போதும் ஜனநாயக ஆட்சி நடை பெற்று வந்த சூழலில், 1989 இல் அப் போது பிரதமராகப் பதவி வகித்து வந்த சாதிக் அல்-மஹ்தியை (Sadiq Al-Mahdi), இராணுவத் தளபதி ஓமர் அல்-பஷீர் (Omar al-Bashir) இராணுவப்படையுடன் சிறைப்பிடித்து நாட்டில் இராணுவ ஆட்சியை நிறுவினார்.

பின்னர் ஓமர் அல்-பஷீர், 1993 இல் சூடானின் ஜனாதிபதியாகவும் தன்னை அறிவித்துக் கொண்டார். 1989 முதல் 2019 வரை 30 ஆண்டு காலம் சர்வதிகார ஆட்சியை நடத்தி வந்தார் ஓமர் அல்-பஷீர். தேர்தல்களும் நடத்தப்படவில்லை. ஆனால், எத்தகைய யதேச்சதிகார சக்தியும் மக்கள் கிளர்ச்சியின் முன் எப்படி மண்டியிடுமோ அது போல, ஓமர் அல்-பஷீரின் சர்வதிகார ஆட்சி 2019 இல் இராணுவத்தின் உதவியோடு மக்கள் போராட்டத்தால் முடிவுக்கு வந்தது.

ஓமர் அல்-பஷீரின் ஆட்சி கவிழ்ந்த 2019 ஓகஸ்டில் ஆட்சிப் பொறுப்பேற்றது.

சூடானின் இடைக்கால பிரதமராக அப்தல்லாஹாம் டோக் (Abdalla Hamdok) பதவியேற்றார். மேலும், 2023 ஆம் ஆண்டு ஜூலையில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஜனநாயக நம்பிக்கையுடன் தொடங்கிய இந்த இறையாண்மைக் குழுவின் ஆட்சி முழுமையாக நீடிக்கவில்லை இராணுவத்துக்கும் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் தலைவர்களுக்குமிடையே நிர்வாகம் சார்ந்த கொள்கைகளில் முரண்பாடு ஏற்படவே, 2021 இல் இராணுவம் மீண்டும் ஆட்சிக் கவிழ்ப்பை நிகழ்த்தியது. அப்போது பிரதமராக இருந்த அப் தல்லாஹாம் டோக் இரா ணுவத்தினரால் சிறைப் பிடிக்கப்பட்டு ஆட்சி கலைக் கப்பட்டது.

இராணுவத் தளபதி அப்தல்ஃபட்டாஹ் அல்-புர்கான் (Abdel Fattah Al-Burhan), நிர்வாகத் தவறுகள் காரணமாக இராணுவம் தலையிட வேண்டிய ஆட்சி கலைக் கப்பட்ட பிறகு, பொது மக்களால் தேர்ந் தெடுக் கப்படும் ஜனநாயக ஆட்சி மீண்டும் கொண்டு வர ப்படும் என இராணுவம் உறுதியளித்தது. அதுவரை இடைக்கால ஆட்சி அமைக்க முடிவு செய்யப்பட்ட போது, மக்கள் போராட்டப் பிரிவினரும் ஆட்சியதிகாரத்தில் பங்கு பெற நினைக்க, இராணுவமும் மக்கள் போராட்ட பிரதி நிதிகளும் இணைந்த இறையாண்மைக் குழு கப்பட்டதாகவும் 2023 இல் தேர்தல் நடக்கும் வரை சூடானில் இராணுவ ஆட்சியே இருக்கும் என்றும் தெரி வித்தார். அதைத் தொடர்ந்து கவுன்சில் ஒன்றை அமைத்து ஆட்சி நடத்த இராணுவம் முன்வர, கவுன்சிலின் தலைவராக இராணுவ தளபதி ஃபட்டாஹ் அல்-புர்கானும் துணைத் தலைவராக ஆர்.எஸ். எஃப் தலைவர் முகமது ஹம் தான் டகாலோவும் (Mohamed HamdanDagalo) பதவியேற்றனர். ஜனநாயகத்தை எதிர்பார்த்த மக்களுக்கு இது அதிர் ச்சியை ஏற்படுத்தவே, இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்கள் குர லெழுப்ப ஆரம்பித்தனர்.

தற்போது சூடான் ஆட்சிய திகாரத்தில் துணைத் தலைவராக இருக்கும் ஆர்.எஸ்.எஃப் தலைவர் முகமது ஹம் தான்டகாலோ மீதும் அவரின் படையின் மீதும் பல்வேறு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதில் ஒன்று, 2019 இல் இராணுவ தலைமையகத்தின் முன்பு போராட்டம் நடத்திய 120 பேர்களை ஆர்.எஸ்.எஃப் சுட்டுக் கொன்றது. இராணுவ ஆட்சி மீதான மக்களின் வெறுப்புக்கு இதுவும் ஒரு காரணம்.

இன்னொரு பக்கம் ஆர்.எஸ்.எஃப்-ஐ, இராணுவப் படையுடன் இணைக்க திட்டமிடப்பட்டது. இதுதான் தற்போது அதிகார மோதலுக்கு ஆரம்பப் புள்ளி. ஒருவேளை இராணுவத்துடன் ஆர்.எஸ்.எஃப் இணைக்கப்பட்டால் யார் அதன் தலைவராக இருப்பார் என்பதே இந்த அதிகார மோதலின் முக்கிய காரணம்.

இதனால் தான் இராணுவத் தளபதிஃபட்டாஹ் அல்-புர்கானுக்கும் ஆர்.எஸ்.எஃப் தலைவர் முகமது ஹம்தான்டகாலோவுக்கும் அதிகார மோதல் நடக்கிறது. இருப்பினும் இந்த மோதலில் முதல் அடியை யார் எடுத்து வைத்தார் என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால், தலைநகர் கார்டோமில் விமான நிலையம், ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றை ஆர்.எஸ்.எஃப் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

அதே சமயம், இந்த அதிகார மோதலில் 200 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் துப்பாக்கி, பீரங்கிக் குண்டுகளுக்கு இரையாகியிருக்கின்றனர். 1,800 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர்.

இந்த மோதல் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும் என அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், சீனா, ரஷ்யா, ஐக்கிய அரபு, எமிரேட்ஸ் போன்ற நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனாலும், மோதல் நிற்காமல் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

துப்பாக்கி, பீரங்கிகளின் சத்தங்களுக்கிடையில் அப்பாவி மக்களின் அழுகுரல்களும் ஓயுமா என்பதையும் மக்களின் ஒரே எதிர்பார்ப்பான ஜனநாயகம் மீண்டும் தழைக்குமா என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.



**“ துப்பாக்கி, பீரங்கிகளின் சத்தங்களுக்கிடையில் அப்பாவி மக்களின் அழுகுரல்களும் ஓயுமா என்பதையும், மக்களின் ஒரே எதிர்பார்ப்பான ஜனநாயகம் மீண்டும் தழைக்குமா என்பதையும் பொறுத் திருந்து பார்ப்போம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் ஆசான்

பத்துத் திங்கள்
அன்னையின் சுமை
பன்னிரு வருடம்
பள்ளியின் சுமை
அறுபது வருடம்
ஆசானின் சுமை.

ஐந்து விரல் அணைத்து
அ'னா எழுத வைத்து
கல்விக் கண்ணைத் திறக்க
கதைகள் பல கூறி
படி ஏற வைத்த பாசமிகு ஆசானும் அவரே
என் கல்வி உயர.


தென்றல் என்னைத் தழுவ
சென்ற இடமெல்லாம்
சிறக்க வழிசமைத்து
ஏணிப்படியாய் இருந்த
என் ஆசானும் அவரே
மூன்று தெய்வங்களில்.

முதல் தெய்வமாகிய
ஆசானே நீங்கள்
என்றும் பதினாறாய்
இன்பம் பொங்க
இனிதாக வாழ்த்துகிறேன்.

கலாநாதன்,
வவுனியா.



# நேர்மை



நேர்மையாயிரு
தலைநிமிர்ந்து
நடக்கலாம்.
மனிதருக்கு
நேர்மை தான்
கற்பு.
நெருப்பைக் கரையான் அரிப்பதில்லை
தனிமனித நேர்மையில்
சமூகம் தூய்மையுறும்.
பொது வாழ்க்கை
ஏன் புழுத்துப் போனது
நேர்மை தவறியவர்களின்
எண்ணிக்கை ஏற்றத்தில்.

தமிழினியார்,
வவுனியா.

# நாடு காத்து வாழ்வதற்கு வாரீர்



பட்ட துயர் கொஞ்சமல்ல தம்பி
கிட்ட நின்று சொல்வதனைக் கேளாய்
வெட்டிப் பேச்சு, வாய்வீரம் போதும்
கிட்ட நெருங்குங்கள் காலம் துயர்
முட்டிக் கிடக்குதெங்கும் பாரும்
படுகொலை, பட்டினிச்சாவு, தற்கொலையோடு
இடி முழக்கமிடும் எரிபொருள் எண்ணெய் வகையாவும்.
கூடி இங்கு வாழ்கிறது கண்டும்
உங்கள் ஆட்சி அதிகாரம் மட்டும் ஏனோ?
நாடு கெட்ட கேட்டை அறியாது பதவி
ஒன்றே நோக்கி ஆள எண்ணி இங்கு
மக்கள் நலம் நாடி நிற்பீரா நீர்
பிடிவாதம் செய்வதில் தான் பதவி, வீரம்,
இடி வீழ்ந்து கொண்டதை யார் கேட்பார்
புவி எங்கும் எங்கள் நாட்டின் கேடு
கேலிப்பேச்சு கிண்டலோடு விஞ்சும்
ஆதரவும் பிச்சை தரும் மனமும் கூறி
தம் பெருமை பேசுகின்றார் கேளீர்
இச்சை கொண்டு பதவிதனை வகுத்து
பிச்சை ஏற்க வைத்த நிலை போதும்
நம் நாட்டைக் காப்பதற்கு எழுவீர்
வீண்வாதம், பிடிவாதம் விட்டு எழுக
நாடு காத்து வாழ்வதற்கு வாரீர்.

வளவை வளவன்.

## மௌனத்தின் தேடல்-605



# ஏனிந்தக் கொடுமை

அடுக்குமாடிகள் ஆடம்பர விடுதிகள்
கிடுகிடுவென வீழ்ந்து சிதறின
எங்கும் மரண ஓலம் ஒலித்தது
ஆற்றுவார் தேற்றுவார் யாருமில்லை
பூமித்தாயே ஏனிந்தக் கொடுமை

பி.யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# மனிதப் படைப்பு

அழகிய உலகத்தில்
மகிழ்வாய் வாழ
மனிதனைப் படைக்க கடவுள்
மனிதனால்தான் உலகம்
சின்னாப்பின்னமாகி
சிதிலமடையப் போகிறதென்று
அறிந்திருந்தால் - அன்று
மனிதனையே படைக்காமல்
விட்டிருப்பான்.


திருமதி.ஜெ.விஜயநிர்மலா,
சங்கத்தானை.

# போர்களின் பூமி

நிலையில்லா வாழ்வுதனை நிலை என எண்ணி
நீதிக்கே சாவு மணி அடித்து
நுட்பமான ஆயுதம் செய்து
நூல்கள் தந்த கல்வி அறிவுதனை
நெறிமுறை பிறழ்வுக்கு பயன்படுத்தி
நேர்மை இல்லை யுத்தம் செய்து
நைல் நதி போல் இரத்த வெள்ளம் ஓட
நொண்டியாய் அலைந்து திரிய வைக்கும்
நோய் தந்த போர்களின் பூமி இது.

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## மௌனத்தின் தேடல்-606



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# ஆதிக்கம் வாழ

எந்த நாட்டுக் குருத்துகள்
குதறப்பட்டாலும்
எந்தத் தேசத்து அவலச் சாவுகளும்
எத்தனை அவலக் குரல்களும்
இரங்கிடாது ஏகாதிபத்தியம்
ஏகாதிபத்திய நலன் காக்க
குருதி வெள்ளமாவதையும்
பிணங்கள் குவிவதையும்
ஆதிக்க வெறி ஊக்குவிக்குது.

சி.இ.அன்புதுரை. மானிப்பாய்.

# பொய்யாக்கி விட்டாய்

இடிந்த கட்டடங்கள்
இணைப்பற்ற சாலைகள்
இடிந்த உறவுகள்
இன்னலில் மக்கள்
பொறுமைக்குப் பூமி என்பீர்
பொய்யாக்கி விட்டாய் நீ.

ரவி,
கொக்குவில்.

# பரிவும் புதிரும்

இந்த அவலமன்று
சொந்த மண்ணிலும் நடந்தது
இன்றும் ஓயாத அலைகளாய்
எங்கும் தொடர்ந்து வருவது
ஒருமுறை போனால் பின்
விரும்பினாலும் திரும்பாதவை
உயிர்கள் என்று போதித்த
போதி மாதவனின் போதனைகள்
ஒடுக்கப்படுவதற்கு வசதியாய்
ஒதுக்கப்பட்டமையே உண்மை
பெருகி வரும் ஆயுதக் குவிப்பு
இப்புவிக்கு மட்டுமன்று
பிரபஞ்சத்திற்கும் ஆபத்தென்பதை
புரிந்து கொள்ளாமை புதிரானது.


க.நாகராசா,
நுணாவில்.

# வாழவிடு இறைவா

வாழ்வழிக்கும் பூமியென நம்பியிருக்க
வாழ்வழித்து நிர்க்கதியாய் வைத்தாயே
அம்மா எனக் கேட்கும் பிள்ளைக்கு ஆறுதல் யார்
கூடி வாழ்ந்த குடும்பம் உறவுகள் எங்கே?
யாரிடம் கேட்பது?அடக் கடவுளே!

ம.திருவரதராசா, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 11 வயதிலேயே முதலீடு 92 வயதில் கோடீஸ்வரன்

எந்தக் காரணம் கொண்டும் மூலதனத்தை, அதாவது பணத்தை இழக்கக்கூடாது என்பது முதல் விதிமுறை. முதல் விதிமுறையை எப்போதும் மீறக்கூடாது என்பது இரண்டாவது விதி என்பது வாரன்பஃபெட்டின் முக்கிய மந்திரம்.

உலகின்முன்னணி பங்குச்சந்தை முதலீட்டாளர், வாரன்பஃபெட். அவரின் சொத்து மதிப்பு சுமார் 10,460 கோடி அமெரிக்க டொலர். இந்திய ரூபாவில் 8,57,720 கோடி. தனது திறமையின் மூலம் 30 வயதிலேயே கோடீஸ்வரர் ஆன வாரன்பஃபெட், இப்போது தனது 92 ஆவது வயதில் உலகின் மிகப் பெரிய பணக்காரராக இருக்கிறார். பங்குச்சந்தை முதலீடு குறித்து அவர் தெரிவித்திருக்கும் மந்திரங்கள் பலருக்கும் கோடீஸ்வரர் ஆக பாதை காட்டக்கூடியவை. அவை இங்கே...

வாரன் தன் 11 வயதில் முதன்முதலில் பங்குச்சந்தையில் முதலீடு செய்தார். 38 டொலருக்கு முதல் பங்கை வாங்கியவர். குறுகிய காலத்தில் அந்தப் பங்கின் விலை 40 டொலராக அதிகரித்த போது, அதை இரண்டு டொலர் இலாபத்துக்கு விற்றார். ஆனால், சிறிது காலம் கழித்து அந்தப் பங்கின் விலை மிகவும் அதிகரித்த போது, தான் எவ்வளவு பெரிய தவறு செய்திருக்கிறோம் என்று எண்ணினார். வாங்கிய பங்குகளைச் சிறிய இலாபத்துக்குக் குறுகிய காலத்தில் விற்பது தவறு என்று உணர்ந்தார். அன்று முதல் அவர் நீண்டகால முதலீட்டாளராக இருக்கிறார்.

எந்தக் காரணம் கொண்டும் மூலதனத்தை, அதாவது பணத்தை இழக்கக்கூடாது என்பது முதல் விதிமுறை. முதல் விதிமுறையை எப்போதும் மீறக்கூடாது என்பது இரண்டாவது விதி என்பது வாரன்பஃபெட்டின் முக்கிய மந்திரம். அதாவது, உங்கள் பங்கு முதலீடு மிக நீண்டகாலத்துக்கானது. மற்றும் ஒரு நிறுவனப்பங்கை அவசரப்பட்டு முதலீடு செய்யத் தேர்வு செய்யக்கூடாது. நன்கு அலசி ஆராய்ந்து, இழப்பு ஏற்படாத அளவுக்கு நல்ல நிறுவனமாகத் தேர்வு செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். 'நிறுவனப் பங்குகளைப் பத்து ஆண்டுகள் வரை நீங்கள் வைத்துக் கொள்ளும் திட்டம் இல்லை என்றால் பத்து நிமிடங்கள் கூட அது குறித்து நீங்கள் சிந்திக்க வேண்டியதில்லை என்று சொல்லும் அவர், 'நீண்டகால முதலீடு தான் நல்ல இலாபத்தை தரும்' என்கிறார். 'பங்கு முதலீட்டை மேற்கொள்ளும் போது, சுயமாக முடிவெடுங்கள். அடுத்தவர்களுக்காகவோ, அடுத்தவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காகவோ முடிவெடுக்கக் கூடாது' என்று அறிவுறுத்துகிறார்.

"இந்தப் பங்குச் சந்தை விளையாட்டுக்குப் பணம் ரொம்ப முக்கியம். அதனை ஆக்சிஜன் என்று கூடச் சொல்லலாம். அது இல்லையென்றால் அடுத்தநாள் இங்கு விளையாடவே (முதலீடுசெய்ய) முடியாது. அது வெறும் சில நிமிடங்கள் இல்லை என்றாலும் கூட இங்கு எல்லாம் முடிந்து விடும்" என தனது நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் (ஏ.ஜி.எம்) பணம் குறித்து வாரன் பேசியிருப்பது மிகவும் அர்த்தமுள்ளது. அதனால் கையில் எப்போதும் சிறிது பணம் இருப்பது அவசியம். அது விலை வீழ்ச்சி வாய்ப்பைப் பயன்படுத்தி முதலீடு செய்யப் பெரிதும் உதவும் நல்ல நிறுவனப் பங்குகளின் விலை மிகவும் குறையும் போது வாங்கப் பணம் தயாராக இருக்க வேண்டும் என்பது அவர் அறிவுரை.

'ஒருவர் தனிப்பட்ட முதலீட்டுத் திறமையை வளர்த்துக் கொள்ளச் செலவு செய்வதும் ஒரு சிறந்த முதலீடு. இது வரையில் செய்த சிறந்த முதலீடு எது என்றால் உங்களை நீங்களே வளர்த்துக் கொள்வது தான். உங்களின் திறனை யாருமே பறிக்க முடியாது. இன்று வரை வாரன்பஃபெட் தகவல் தொழில்நுட்பத்துறை நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்வதில்லை. காரணம், அந்தத் துறையின் செயற்பாடுகளைத் தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று அவர் நினைக்கிறார். அதே காரணத்துக்காக, கிரிப்டோகரன்ஸிகளிலும் வாரன்பஃபெட் முதலீடு செய்ததில்லை. எனவே, எந்தவொரு முதலீட்டுக்கும் அது குறித்த அறிவை அவர் வலியுறுத்துகிறார்.

முதலீட்டுக்கு முன்... வாரன்பஃபெட்டின் மந்திரங்களை மனதில் வைப்போம்!

மனிதன் சுகத்தைத் தேடிப் போகிறான். ஆனால் துக்கமோ அவனைத் தேடி வருகிறது. ஆக, சுகத்தை அடைவதற்கான நமது முயற்சி நிச்சயம் இருக்க வேண்டும் என்று தர்மசாஸ்திரம் நமக்கு உபதேசம் செய்கிறது. மனிதனைத் தவிர மற்ற ஜந்துக்கள் அனைத்தும் சுகமாக வாழ்வதற்குத் தேவையான வழிவகைகளை பகவானே செய்து விடுகிறான். மனிதன் ஆறாவது அறிவு உள்ளவன். எனவே, அவன் சுகமாக இருப்பதற்கு தேவையான விடயங்களைச் சுயமாகவே தேடிக் கொள்ள வேண்டும். மிருகங்கள், பறவைகள்... இவற்றுக் கெல்லாம் ஆறாம் அறிவு இல்லை. ஆகவே, அவற்றைச் சுகமாக வைத்துக் கொள்ளும் வழிகளில் இயற்கையே இழுத்துச் செல்லும்.

ஆனால், மனிதனைப் பொறுத்த வரையிலும் இது தான் மகிழ்ச்சியான வாழ்க்கை - இதுதான் மகிழ்ச்சிக்கான வழி என்பதை அறிந்து, அவனே முயற்சி செய்து அதை அடைந்தாக வேண்டும். எவரும் சோம்பலுடன் இருக்கக் கூடாது சுறுசுறுப்புடன் செயற்பட வேண்டும். தனக்கும் தான் குடியிருக்கும் இந்த உலகிற்கும் நன்றியுடையவராக இருக்க வேண்டும் எனில்... "தான் பெற்ற செல்வம் எல்லோரும் பெற வேண்டும்" என்ற ஏக்கத்துடன் செயற்பட வேண்டும். செல்வம் என்றதும் பணம் என்று மட்டும் அர்த்தம் இல்லை. நம் கலாசாரமும் செல்வம் தான். எல்லோருக்கும் பயன்படும் வகையில் அதை எடுத்துச் செல்ல வேண்டும். "எல்லோருக்கும் எல்லாமும்" என்று வாழும் மனம் மகிழ்ச்சியைச் சுவைக்கும். இந்த நோக்கத்துடன் தான் நம் ரிஷி பரம்பரை பல வழிகாட்டுதல்களை நமக்கு வழங்கியது.

இவ்வளவு விடயங்கள் இருந்தும் நம் மனதில் சமாதானம் இல்லை. துக்கத்திலேயே ஆழ்ந்திருக்கிறோம். சுகத்தைக் காணோம். குறையில்லாத மனிதரைக் காண முடியவில்லை. படித்தவர், படிக்காதவர் எல்லோருமே ஏதோ ஒரு குறையுடனும் அதன் பொருட்டு துக்கத்துடனும் வாழும் நிலை. "பூரணமான மனித சிருஷ்டியே இல்லையோ" என்றே எண்ணம் எழும் நிலை. இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள் நம் முன்னோர்கள் . என்ன பதில் கிடைத்தது தெரியுமா?

'மனதைச் சுத்தமாக வைத்துக் கொண்டால் குறையில்லை. மனம் தான் எல்லா விதமான கோலாகலத்துக்கும் எல்லா விதமான சமாதானத்துக்கும் ஆதாரம்' என்பது தெரிய வந்தது. சுகமும் துக்கமும் மாறி மாறி வருபவை. ஒருவன் துக்கத்தை அனுபவித்தால் தான் அவனுக்குச் சுகத்தின் சுவாரஸ்யம் தெரிய வரும். இரவில் சோம்பலைச் சந்திப்போம் விடிந்ததும் பகலில் பிரகாசம் வந்ததும் சுறுசுறுப்பாய், மகிழ்ச்சியாய் உணர்வோம்.

இப்படி சுக,துக்கங்கள் மாறிமாறி வரும். ஆனால் நாம் என்ன எதிர்பார்க்கிறோம்? துக்கமே இல்லாத சுகம் மட்டும் வேண்டும். துயரத்தைத் துளியும் தொடாத மகிழ்ச்சி வேண்டும் என்று கருதுகிறோம். அதை அடைய வேண்டும் எனில், மனதைப் பற்றி முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் அதை அடையும் வழியில் மனதைச் செலுத்த முடியும் எனில் மனதை அதன் சூட்சுமத்தை அவசியம் அல்லவா?

ஒரு யுவன், ஒரு யுவதி. இருவரின் கண்ணும் கண்ணும் பார்த்துக் கொள்கின்றன. வெளியில் இருக்கும் உருவங்களை கண்கள் முதலில் பார்க்க திருப்தி ஏற்படுகிறது. அதன் பிறகு மனம் இரண்டும் பார்த்துக் கொள்கின்றன. மனம் இரண்டும் ஒன்றாகின்றன. தொடர்ந்து சங்கல்பம் ஏற்படுகிறது. அந்தச் சங்கல்பமே எண்ணமாகிறது. அவனும் என்னை விரும்பினால் நன்றாக இருக்கும் என்று எண்ணம் எழுகிறது. இப்படியான தொடர்ச்சிகளின் ஒட்டு மொத்த உருவகமே மனம்.

ஆக, மனம் என்று ஒன்று தனிப் பொருளாக இல்லை. ஒட்டுமொத்த எண்ணக் குவியலே மனம். அதன் ஆழம் என்ன என்று தெரியாது. அகலம் என்ன என்ற அளவும் தெரியாது. மனதைக் கண்ணால் பார்க்க முடியாது. எடுத்துச் சொல்லவும் முடியாது. அத்தனையும் - சங்கல்பம். நாமாக தீர்மானம் செய்கிறோம் அல்லவா அதுவே மனம். அந்த மனதுக்கு உண்டான சாமர்த்தியங்கள் நம்மை அசர வைப்பவை.


# மனமே மா மருந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்புறா

## அவள் அறிந்த இரகசியம்




காலத்தின் பதிவு 58

"நான் ஏற்றாலும் ஏற்பாரா? என்ற ஒரு கேள்வி "அவள் உள்ளத்தே எழுந்தது. அந்தக் கேள்வி விளைவித்தது வேதனையா? வாழ்வின் சோதனையா? புரியவில்லை அவளுக்கு. ஆனால் ஒரு பெரும் இன்ப உணர்ச்சி மட்டும் அவள் நரம்புகளை ஊடுருவிச் சென்றது. அதில் வேதனையும் இருந்தது. சோதனையும் இருந்தது.

### அவள் அறிந்த இரகசியம்

காதல் வசப்பட்டு கலத்திலிருந்த உணவைக் கணப்பொழுது கூடக் கண்ணெடுத்துப் பாராது. கன வேகத்தில் கருத்திலே துள்ளி எழுந்து கலக்கிக் கொண்டிருந்த கணக்கற்ற எண்ண அலைகளிலும் இன்ப வேதனைகளிலும் சிக்கித் தத்தளித்துக் கொண்டும் அத்தனை தத்தளிப்பிலும் மகிழ்ச்சி சாயைகளை மதிவதனத்தில் படரவிட்டு கொண்டும் எதிரே ஆசனத்தில் சிலையென அமர்ந்திருந்த மஞ்சளகியின் மன ஓட்டங்களை சந்தேகத்திற்கிடமின்றி புரிந்து கொண்ட பலவர்மன் இதயத்தில், ஆரம்பத்தில் சிறிதளவு கோபம் துளிர்த்ததனாலும் இறுதியில் உதயமான புதியதொரு யோசனை அந்தக் கோபத்தை அறவே அறுத்து விட்டதால் அவன் பெரும் மனச் சாந்தியையே அடைந்தான். தன் யோசனையில் உருவெடுத்த திட்டம் மட்டும் பலித்து விட்டால், அந்த இரவு நிகழ்ச்சியால் விளைந்து விட்ட எல்லையில்லாத் தொல்லைகள் அனைத்துக்கும் பரிகாரத்தை நிச்சயமாக காணலாம் என்ற உறுதி ஏற்பட்டதால் இளையபல்லவனைச் சந்தித்ததிலிருந்து அந்த விநாடி வரை அவனுக்கிருந்த மனப் போராட்டங்கள் மறைந்ததன்றி, அவை மறைந்தன்றி ,அவை மறைந்து விட்டதற்கு அடையாளமாக அவன் முகத்திலும் சாந்தியின் சாயை வெகு துரிதமாக படர்ந்தது.

அன்றைய காலையில் இளையபல்லவன் வந்துவிட்டுப் போன போதே மஞ்சளழகியின் மனநிலையில் திடீரென ஏதோ மாறுதல் ஏற்பட்டு விட்டதைக் கண்ட அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் அது காதலாயிருக்க முடியாது என்றே முதலில் எண்ணினான். கண்டதும் காதல் என்பது கற்பனை நாடகங்களிலும் கட்டுக் கதைகளிலும் தான் ஏற்படுமே தவிர, வாழ்க்கையின் அனுபவத்தில் அத்தகைய திடீர் அன்புக்கு இடமில்லையென்றே நினைத்த கோட்டைத் தலைவன், மஞ்சளழகியின் மன அலைச்சலுக்குக் காரணம் புதியதொரு நாகரிக மனிதனைக் கண்டதேயொழிய வேறு இல்லையெனத் தீர்மானித்திருந்தான்.

அக்ஷயமுனைக் கோட்டையின் சாதாரணப்பிரஜைகளும் பதக் முதலிய நாகரிகப் பூர்வக்குடிகளையும் அத்தனை அநாகரிக மில்லா விட்டாலும் குடியாலும் குரோதத்தாலும் நிதானமற்ற வாழ்க்கையாலும் கண்ணியமிழந்து கிடந்த கொள்ளைக் கூட்டத்தையுமே பார்த்திருந்த தன் மகளுக்கு அரச தோரணையும் நாகரிகப் போக்கும் கம்பீரமும் உடைய இளையபல்லவன் ஒரு புது மனிதனாகத் தோற்றமளித்திருக்க வேண்டுமென்றும் தவிர அவனைப் பற்றி ஏற்கெனவே சொர்ணபூமியில் பரவிவிட்ட புகழும் அவளுடைய மனத்தில் ஓரளவு கவர்ச்சியை உண்டு பண்ணியிருக்க வேண்டுமென்றும் பலவர்மன் ஆரம்பத்தில் எண்ணினாலும் அன்றையப் பொழுது போகப் போக அவனுக்குத் தான் நினைத்தது சரியா என்பதில் பெரும் சந்தேகம் தோன்றத் துவங்கியது.

அவள் சதா ஏதோ கேட்ட போதெல்லாம் கனவிலிருந்து மீண்டவள் போல், "என்ன, என்ன கேட்டீர்கள்?" என்று இரண்டாம் முறை தன் கேள்வியைத் திருப்பிச் சொன்னதையும் கண்டதும் சந்தேகம் மட்டுமின்றி ஓரளவு கோபமும் அவன் இதயத்தில் துளிர்க்கலாயிற்று. தான் கேள்வி கேட்ட போதெல்லாம் அவள் சரியாகப் பதில் சொல்லாத மட்டுமல்லாமல் சில சமயங்களில் அவளாகவே பேசத் தொடங்கி, "ஏனப்பா! இரவு நிகழ்ச்சிக்கு அவர் வந்தால் அவருக்கு ஏதாவது ஆபத்து விளையுமென்று எதிர்பார்க்கிறீர்களா?" என்றும் "அந்த நால்வரும் கலவரத்தைத் துவக்கினால் நமது காவலர் தடுக்க முடியாதா?" என்றும் ஏதேதோ கேள்விகளை அவள் அன்றைய பகலில் பலமுறை கேட்டு விட்டதையும் அக்கேள்விகளை அவள் வீசிய சமயங்களில் அவளது மங்கள முகத்தில் கவலைக்குறி வெகுவாகப் படர்ந்து கிடந்ததையும் கவனித்த கோட்டைக் காவலனான பலவர்மன், 'சில நாழிகைகளே சந்தித்த அந்த வாலிபன் மீது எத்தனை அக்கறை காட்டுகிறாள் இவள்?" என்று எண்ணிக் கோபம் கொண்டானானாலும், 'இந்தப் புது மோகம் சீக்கிரம் பறந்துவிடும். நிலையற்றது' என்று தீர்மானித்துத் தன்னைச் சற்றே நிதானப்படுத்திக் கொண்டான்.

ஆனால் அந்த முடிவு எத்தனை தவறு என்பதைக் கடற்கரையில் நடந்த நிகழ்ச்சிகளால் சந்தேகமறப் புரிந்து கொண்ட பலவர்மன் பெரும் திகைப்புக்குள்ளானான். மனிதர்களுடைய மனப் போக்கை எடைபோடுவதில் நிகரற்றவனாக அக்ஷயமுனைக் கோட்டைக் காவலன் நடனத்தின் போது பலமுறை பல திசைகளில் அசைந்த மஞ்சளழகியின் அழகிய விழிகள், திரும்பத் திரும்ப ஆசையுடன் தன் காலடியில் அமர்ந்திருந்த இளைய பல்லவன் மீதே பதிந்ததையும் அவள் கரங்களும் திரும்பத் திரும்ப அவனை நோக்கியே நீண்டதும் தன் மகளின் மனம் இளையபல்லவனிடம் அடியோடு லயித்து விட்டது என்பதை உணர்ந்து கொண்டான்.

நடனத்தின் முடிவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அந்த உணர்வுக்குப் பெரும் ஆதாரத்தை அளித்தன. வில்வலன் இளையபல்லவனை வாள்போருக்கு அழைத்தபோது மஞ்சளழகியின் கண்களில் திகில் மண்டியதையும் வில்வலன் வாள் ஆகாயத்தில், பறந்த போது அவள் முகத்தில் மகிழ்ச்சியும் பெருமிதமும் தாண்டவமாடியதையும் இளைய பல்லவன் அவள் இடையைத் தொட்டுத் தூக்கிப் புரவியில் அமர்த்திய பின்பும் இரண்டு விநாடிகளுக்கு அவள் புரவியை நடத்தாமலே இருந்ததையும் பார்த்த பலவர்மன் விடயம் தான் நினைத்ததை விடப் பன்மடங்கு முற்றி விட்டதை அறிந்து கொண்டான். அந்த அறிவினால் கற்பனைக் கதைகளிலும் உண்மை நிரம்ப இருக்கிறது என்ற எண்ண கதைகளிலும் உண்மை நிரம்ப இருக்கிறது என்ற எண்ணமும் அவன் சித்தத்தில் எழுந்தது.

உணர்ச்சியில் இருந்து தான் கற்பனையும் விளைகிறது. கதையும் விளைகிறது என்ற உண்மையும் அவன் உள்ளத்தில் அன்றிரவு ஊறவே, கண்டதும் காதல் சாத்தியம்தான் என்ற முடிவுக்கும் அவன் வந்தான். அந்தக் காதல் தன் மகளை நன்றாக வளைத்துக் கொண்டு விட்டதையும் அதன் விளைவாகவே அவள் உணவைத் தொடாமல் உட்கார்ந்திருக்கிறாள் என்பதையும் உணர்ந்து கொண்டான் பலவர்மன்.

செவிக்குணவு இல்லாத போதுதான் சிறிது வயிற்றுக்குத் தேவை என்பது வள்ளுவர் முடிவு. ஆனால் காதலே மனத்துக்குப் பெரும் உணவு. அது இருக்கும் போது மற்ற உணவு மாந்தருக்குத் தேவையில்லை என்பதை அன்று மஞ்சளழகி அறிந்து கொண்டாள். அந்தக் கருத்து எத்தனை உண்மை என்பது பலவர்மனுக்கும் நன்றாகப் புரிந்தது.

அப்படிப் புரிந்ததால் முதலில் சற்று கோபத்தின் வசப்பட்ட பலவர்மன், தன் மகள் திடீரெனக் காதல் வசப்பட்டதற்கு தானும் ஒரு காரணம் என்று எண்ணியதால் குற்றத்தை அவள் மீது மட்டும் சுமத்த முடியாதென்பதையும் அது குற்றமானால் அதில் தனக்கும் பங்கு உண்டென்பதையும் தீர்மானித்துக் கொண்டதால் அவன் சில விநாடிகள் ஆத்ம சோதனையில் இறங்கினான். பருவ எழில்கள் பூத்துக் குலுங்க எதிரே உட்கார்ந்திருந்த தன் மகளை வயது வந்த பெண் என்ற முறையில் அன்றே எண்ணமிட்டு நோக்கிய பலவர்மன், அன்று வரை அவள் திருமணத்தைப் பற்றித் தான் தினையளவும் சிந்தித்ததில்லை யென்பதையும் நினைத்துப் பார்த்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தின் தேவையை உரத்துப் பேசும்

# விடுதலை






பெயரிலேயே நிரந்தர வெற்றியின் எதிர்கால அத்தியாயத்தை திறந்திருக்கும் திரையுலக இயக்குனர் வெற்றிமாறனின் மற்றுமோர் அற்புதமான திரைப்படைப்புதான் விடுதலை திரைப்படம்.

முதன் முதலில் சர்வதேசத் தரத்திலான ஒரு தமிழ் திரைப்படம் என்றால் அது வெற்றிமாறனின் விடுதலையைத்தான் பெருமையாக சொல்ல வேண்டும்.

தமிழ்நாட்டின் தமிழ் தேசியவாதிகள் இதுவரை காலமும் தமிழ் திரையுலகவரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு ஒரு தமிழ் திரைப்படத்தை நல்ல விமர்சனத்தோடு நோக்குகின்றார்கள் அல்லது கொண்டாடுகின்றார்கள் என்றால் அது வெற்றிமாறனின் விடுதலை திரைப்படமாக மட்டும்தான் இருக்க முடியும்.

இயக்குநர் பாலுமகேந்திரா என்ற பல்கலைக்கழகத்தில் தமிழ் திரைப்பட நுட்பங்களை சரிவரக் கற்று பெயர் சொல்லும்படியாக வெளியேறியவர்கள் இருவர். ஒருவர் இயக்குநர் பாலா, மற்றையவர் இயக்குநர் வெற்றிமாறன். இவர்கள் இருவரும் தமிழ் திரையுலகத்தை சர்வதேசமே வியந்து பார்க்கும் அளவுக்கு பிரமிப்பாய் மனித உணர்வுகளில் நகர்த்திச் சென்றார்கள்.

தமிழ்த் திரையுலகம் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல இயக்குநர்கள் ஊடாக தன்னை புதுப்பித்துக் கொண்டது. ஊமைப் படத்திலிருந்து பேசும் படமாகவும் பின்பு பக்தி இதிகாச படங்களாகவும் பின்பு சரித்திரம் பேசும் படங்களாகவும் பின்பு தனிமனித கதாநாயக விம்பங்களை உருவாக்கும் படங்களாகவும் அதன் பின்பு சமூக சீர்திருத்த படங்களாகவும் அது காலப்போக்கில் பரிணாம வளர்ச்சியடைந்தது.



இருந்தும் சமூகத்தில் இன,மத,சாதி ரீதியிலான அடக்குமுறைகளை வெள்ளித் திரையில் முழுமையற்று பேசக் கூடிய திரைப்படங்களும் கூட அரிதாகவே வெளிவந்தன. அதிலும் தமிழ்த் தேசியத்தை உரத்துப் பேசக்கூடிய திரைப்படங்கள் ஒருபோதும் வெளிவரவே இல்லை என்பது தமிழ் திரையுலகில் ஒரு பெரும் குறையாகவே இதுவரை காலமும் இருந்து வந்துள்ளது.

சமகாலத்தில் திராவிட அரசுக்கு எதிராக தமிழ் நாட்டில் தமிழ்த் தேசியம் வலுப்பெற்றிருக்கின்றது. தமிழ் நாட்டை ஒரு தமிழனே ஆள வேண்டும் என்ற இன ரீதியிலான அரசியல் பரப்புரை மூலை முடுக்கெல்லாம் தீயாய் பரவி வருகின்றது.

அந்த தமிழ் தேசியத்தை ஆழமாக தாங்கிச் செல்லக் கூடிய ஒரு ஊடகமாக தமிழ் திரையுலகமே சமகாலத்தில் எங்கும் வியாபித்து நிற்கின்றது.

தமிழ் திரையுலகின் பெரும்பலம் கொண்டே முன்னர் தமிழ்நாட்டின் அரசியல் ரீதியிலான திராவிட ஆட்சியதிகாரங்கள் பெரும்பாலும் கட்டமைக்கப்பட்டன.

கதாநாயகர்களே ஆட்சி செய்யும் அளவுக்கு மக்களின் மனங்களில் தமிழ் திரையுலகம் நாற்காலி போட்டு அமர்ந்து கொண்டது.



தமிழ்நாட்டில் தமிழ் தேசியத்திற்கு எதிராக திராவிடத்தை அறிந்தோ அறியாமலோ அசுரத் தனமாய் வளர்த்து விட்டது தமிழ் சார்ந்த திரையுலகம் மட்டுமே. இன்று அந்த தமிழ் திரையுலமே திராவிடத்தை வீழ்த்தி தமிழ் தேசியத்தை வளர்க்க வேண்டிய நிரந்தர தமிழ் சூழலுக்குள் தள்ளப்பட்டு விட்டது.

கடந்த காலங்களில் தமிழ் நாட்டை ஒரு தமிழன் ஆட்சி செய்திருந்தால் இலங்கையில் முள்ளிவாய்க்காலும் அதனுடன் இணைந்த ஈழத்தமிழ் இன சுத்திகரிப்பும் பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு வெறும் பகல் கனவாகவே இருந்திருக்கும்.

தமிழ் நாட்டு அரசியலிலும் தமிழ் திரையுலகிலும் வேற்று இனத்தவர்கள் நிரந்தரமாய் களை பிடுங்கப்பட்டு தமிழ் தேசியமும் தமிழர்களுமே எங்கும் பயிரிடப்பட வேண்டும் என்பதை தமிழ்நாட்டு தமிழ் தேசியவாதிகள் சமகால சூழலை உணர்ந்து செயற்படுவது ஒரு நல்ல ஆரோக்கியமான செயலாகும்.

திராவிடம் தன் அரச இயந்திரத்தை பயன்படுத்தி தமிழ்நாட்டு தமிழர்கள் மீது ஏவி விட்ட வன்முறைகளை வெற்றிமாறனின் விடுதலை திரைப்படம் சற்றும் அச்சுப் பிசகாமல் பல அதிர்வுகளோடு பேசுவது வரவேற்கத்தக்க விடயமே.

கடந்த கால தமிழரல்லாத திராவிட ஆட்சியதிகாரங்களின் தாக்கங்களையும் அரச இயந்திரத்தின் சாதி அடிப்படையில் தமிழ்ப் பெண்கள் மீது ஏவி விடப்பட்ட பாலியல் பலாத்காரங்களையும் சர்வதேசத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதே உண்மையான விடுதலை, என்பதை விடுதலை திரைப்படம் பறைசாற்றுகின்றது.

தேசத்திற்காகவும் மக்களுக்காகவும் போராடும் போராளிகளும் மாவீரர்களும் தேசத்தின் சொத்து என்பதையும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் இயக்குநர் வெற்றிமாறன் தெளிவான காட்சிகள் ஊடாக வெள்ளித்திரையில் பேச முற்படுவது தான் ஒரு தமிழ்த் தேசியவாதி என்பதையும் தமிழ் திரையுலகம் தமிழ் தேசிய மயமாக மாற வேண்டும் என்பதையும் இது சுட்டி நிற்கின்றது.

தமிழ் திரையுலகை கருவியாகக் கொண்டு தங்கள் கஜனாவை நிரப்பும் தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் கடுகளவாவது திராவிடத்துக்கு எதிராக தமிழ் தேசியத்தை வளர்ப்பதற்கு. தமிழ் தேசியம் சார்ந்து பயணிக்கும் வெற்றிமாறன் போன்ற இயக்குநர்களுக்கு வாய்ப்புக்களை வழங்க முன் வருவதே தமிழ்நாட்டை தமிழ் தேசிய மயமாக மாற்றுவதற்கான சிறந்த உபாயமாகும்.

சாம் - ரமேஸ்குமார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப் படம் : தெய்வ மகன்
இசை அமைப்பு : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : டி.எம்.சௌந்தராஜன்



தெய்வமே தெய்வமே ..
நன்றி சொல்வேன் தெய்வமே
தேடினேன் தேடினேன் ..
கண்டு கொண்டேன் அன்னையை
கண்டு கொண்டேன் அன்னையை
தெய்வமே தெய்வமே
சந்தித்தேன் நேரிலே .. சந்தித்தேன் நேரிலே
பாசத்தின் தேரிலே
தெய்வமே தெய்வமே

முத்துபோல என் தம்பி வந்தவுடன்
முத்தம் சிந்த ஓடினேன்
ஓடினேன் ஓடினேன் ..
அட ராஜ என் தம்பி வாடா
(அண்ணா.. அண்ணா..)
அண்ணா என சொல்வானென
பக்கம் பக்கம் சென்றேன்
அண்ணா என சொல்வானென
பக்கம் பக்கம் சென்றேன்
(குழந்தை என் கையை கடித்து விட்டது
ஹ ஹஹா..போடா போ..)
தெய்வமே தெய்வமே தெய்வமே தெய்வமே

அன்னையை பார்த்த பின்
என்ன வேண்டும் நெஞ்சமே
இன்று நான் பிள்ளை போலே
மாற வேண்டும் கொஞ்சமே
(வேரில்லாமல் மரமா? மரமில்லாமல் கிளையா?
கிளையில்லாமல் கனியா?எல்லாம் ஒன்று)
தெய்வமே தெய்வமே தெய்வமே தெய்வமே

கண்ணீரினில் ..
உண்டாவதே..
கண்ணீரினில் உண்டாவதே
பாசம் என்னும் தோட்டம்
(விதி என்னும் நதி ஒரு பக்கமாகவே
ஓடுகின்றது. போடா போ)
தந்தையை பார்த்தபின்
என்ன வேண்டும் நெஞ்சமே
தர்மமே தந்தை தாயை
காக்க வேண்டும் தெய்வமே
தெய்வமே தெய்வமே
னன்றி சொல்வேன் தெய்வமே
தேடினேன் தேடினேன் ..
கண்டு கொண்டேன் அன்னையை
கண்டு கொண்டேன் அன்னையை

# ஊடகத்தை கையாளத் தெரிந்த டோனி

சந்தித்தல் என்பது ஒரு கலை. எந்தத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும் பிரபலமாக இருக்கும் பட்சத்தில் ஊடகவியலாளர் சந்திப்புகளை நிகழ்த்தும் போது அவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதுவுமே அவர்களுடைய கரியரின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிக்கும் முக்கிய விடயமாக இருக்கும்.

அந்த வகையில் விளையாட்டுத் துறைப் பக்கம் வந்தால்... அதிலும் கிரிக் கெட்டை எடுத்துக் கொண்டால், டோனியின் ஊடகவியலாளர் சந்திப்புகளைச் சிலாகிக்காத ஆட்களே இருக்கமாட்டார்கள்.

கேள்விகளுக்கு டோனி கூறும் பதில்களில் மாற்றுக் கருத்துகள் இருக்கலாம். ஆனால், கேள்விகளை அவர் எதிர்கொள்ளும் விதமும் அதற்கு எதிர்வினையாற்றும் விதமும் எப்போதுமே ஒரு வித சுவாரஸ்யத்தையும் முதிர்ச்சியையும் உள்ளடக்கியதாகத் தான் இருக்கும். சமீபத்தில், உலகக் கோப்பையை வென்று 12 ஆண்டுஆனதற்காக ஒருவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவுஸ்தி ரேலிய வீரர் மைக் ஹஸ்ஸியுடன் அமர்ந்து தன்னுடைய உலகக் கோப்பை நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார் டோனி. நிகழ்வு முடிந்தவுடன் விருந்தினர்கள் விடை பெறத் தொடங்கினர். டோனிக்குமே அடுத்ததாக ஐ.பி.எல் போட்டிக்கான பயிற்சிக்காக சேப்பாக்கம் செல்ல வேண்டியிருந்தது. அவசரத்தில் விருந்தி னர்கள் பரபரப்பாக குழு புகைப் படத்திற்காக போஸ் கொடுத்தனர். ஆங்கிலப் பத்திரிகையைச் சேர்ந்த புகைப்படக்காரர், புகைப்படம் சரியாக விழவில்லை என மீண்டும் ஒரு போஸ் கேட்க, எல்லோருக்கும் பதற்றம். டோனி மட்டும் கூலாக அந்தப் புகைப்படக்காரரைப் பார்த்து ஜாலியாக ஒரு கமெண்ட் அடித்தார். அந்தப் புகைப் படக்காரர் உட்பட, அந்த இடத்தில் கூடியிருந்த அனைவரையும் நொடிப் பொழுதில் கலகலப்பாக்கி விட்ட டோனி.

இந்த மாதிரியான குட்டி குட்டி விடயங்கள் தான் டோனி ஊடகவியலாளர்களைச் சந்திக்கும் போது அதிக கவனத்தைப் பெறுகிறது. 2016 ஆம் ஆண்டு நடந்த இருபது- 20 உலகக் கோப்பையின் அரையிறுதியில் இந்திய அணி, வெஸ்ட் இண்டீஸ் அணியிடம் தோற்று, தொடரிலிருந்து வெளியேறியது. அந்தப் போட் டிக்குப் பிறகு, ஊடகவியலாளர் சந்திப்புக்கு வந்தார் டோனி. வழக்கமாக உலகக்கோப்பையில் ஓர் அணிதோற்கும் போது அதன் கப்டன் பதவியிலிருந்து விலக்வதையும் ஓய்வு பெறுவதையும் பல சமயங்களில் பார்த்திருப்போம். டோனிக்கு அடுத்ததாக விராட் கோலியும் பெரிய நட்சத்திரமாக வளர்ந்து விட்டதால், டோனி எப்போது ஓய்வு பெறுவார் எனும் கேள்வி அவரைத் துரத்திக் கொண்டே இருந்தது. உலகக் கோப்பைத் தோல்வி க்கு அடுத்த நாள் அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவுஸ் திரேலியாவைச் சேர்ந்த சாம்ஃபெரிஸ் எனும் ஊடக வியலாளர், டோனியிடமே ஓய்வு பெறுவதைப் பற்றியும் கேள்வி கேட்டார். டோனி என்ன சொன்னாலுமே தலைப்புச் செய்திதான். ஆனால்டோனியால் எதையுமே வெளிப் படையாகச் சொல்ல முடியாத நிலை. அணி யில் அவரது இடம் அப்படியானதாக இருந்தது. மேலும், இப்படி ஒரு கேள்வி டோனியை நிச்சயமாக உஷ்ணப் படுத்தவும் செய்திருக்கலாம். ஆனால், அந்தச் சூழலிலும் டோனி நிலை தடு மாறவில்லை. அந்த ஊடகவியலாளரைத் தன் அருகே அழைத்துத் தோள் மீது கை போட்டபடியே, 'நான் நன்றாக கேட்ச் பிடிக்கிறேனா, ஓட்டங்கள் எடுக்க நன்றாக ஓடுகிறேனா?" எனக் கேள்விகளை அடுக்கினார். அதற்கு சாமும், 'ஆமாம்... ஆமாம்' என மிரட்சியோடு பதிலளித்தார்.எனில், 2019 உலகக் கோப்பை வரை நான் ஆடலாமா? எனக் கேட்க, 'தாராளமாக என சாம் பதில ளித்தார்." உங்களுடைய கேள் விக்கு இது தான் பதில்" என சாமை வழியனுப்பி வைத்தார் டோனி. அந்த மொத்த அறையுமே கலகலப்பின் உச்சத் துக்குச் சென்றது.











ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இந்தச் சம்ப வம், இன்று வரைக்குமே பல சமயங்களில் இணை யத்தளத்தில் பேசு பொருளாக ஓடிக் கொண்டிருக்கிறது. இந்தச் சம்பவத்திற்கு இடையில், 'இந்தக் கேள்வியை இந்திய ஊடகவியலாளர் ஒருவர் கேட்பார் என நினைத்தேன்' என சாமிடம் இரண்டு மூன்று முறை கூறினார் டோனி.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பு முடிந்த பிறகு இந்த நிகழ்வைப் பற்றி சாம்ஃபெரிஸ் எழுதிய ஒருகட்டுரையில்.. டோனியின் செய்கையில் கொஞ்சம் அதிருப்தியாகவே இப்படிக் குறிப்பிட்டார்.

ஒரு காலகட்டத்தில் இந்திய அணிக்குள் வீரர்களுக்கிடையே கடுமையான முரண்களும் மோதல்களும் இருப்பதாகச் செய்திகள் வெளியாகின. குறிப்பாக, சேவாக், டோனி இருவரும் கடுமையாக முட்டி மோதிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வெளியா கின. அந்தச் சமயத்தில் வரலாற்றில் அதற்கு முன்பு இல்லாத வகையில் அணியின் வீரர்கள் அனைவரையும் ஒரு சேர ஊடக வியலாளர் சந்திப்பிற்கு அழைத்து டோனி விளக்கம் அளித்தார்.

அதே மாதிரி, ஊடகவியலாளர் சந்திப்புகளுக்கு வீரர்களை டோனி அனுப்பும் போது அதற்குப் பின்னால் ஒரு பெரும் செய்தி ஒளிந்திருப்பதைப்பார்க்க முடியும். இப்போது சென்னை அணி ஐ.பி.எல் இல் ஆடி வருகிறதே.

அதில் சென்னை அணி தோற்கும் போட்டிகளிலெல்லாம் பயிற்சியாளர்ஃப்ளெம்மிங்கை ஊடக வியலாளர் சந்திப்பிற்கு அனுப்பி வைக்கிறார்.

அதே சமயம், இந்த சீசனில் சென்னை அணி முதல் போட்டியில் வென்ற சம யத்தில் இளம் வீரர் துஷார் தேஷ்பாண்டேவை ஊட கவியலாளர் சந்திப்புக்கு அனுப்பினார் டோனி.

இதில் ஒளிந்திருக்கும் தலை மைத்துவம் குறித்துத் தனியாகவெல்லாம் விளக்கத் தேவையில்லை!

ஊடகவியலாளர்கள், மக்களின் பிரதிநிதிகள். அவர்களைச் சரியாகக் கையாளத் தெரிந்த பிரபலங்கள் தான் தலைவர்களாக உயர்கிறார்கள்... டோனியைப் போல! •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

339

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உணவே வள்ளுவம் காட்டும் மருந்து

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"** என்ற கருத்தில் எவருக்கும் இருவேறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. நோய் அல்லது பிணியானது வாழ்க்கையில் உண்டுபண்ணும் தாக்கம் மிகப் பெரியது. உடல் உபாதை, மன உளைச்சல், வீண் பண விரயம், உயிரிழப்பு என இத்தாக்கங்களை எண்ணிக்கொண்டே போகலாம். ஒரு நோயாளியினால் குடும்பத்தில் ஏனைய அங்கத்தவர்களுக்கும் அந்நோயாளியைப் பராமரிப்பவருக்கும் ஏற்படும் சிரமங்கள் சொல்லிடடங்காதவை.

நோயின் பரிமாணம் காலத்துக்கு காலம் மாறுபடுகின்றது. பண்டைய காலத்தில் தொற்று நோய்களும், சிசு மரணங்களும், மகப்பேற்று கால உயிரிழப்புக்களும் மனித சமுதாயத்தை உலுக்கிய பேரவலங்கள் ஆகும். மருத்துவம் பெருவளர்ச்சி கண்ட பின் 21ஆம் நூற்றாண்டில் தொற்று நோய்களற்ற பல நோய்களும், புற்று நோயும், விபத்துக்களும் மனித இனத்துக்கும் பெரும் சவாலாக விளங்குகின்றன.

வாழ்க்கை முறையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களே இப் புதிய சவாலுக்கு காரணமாக அமைகின்றது. நீரிழிவு, உயர்குருதியமுக்கம், சிறுநீரக செயலிழப்பு போன்ற முக்கிய நோய்கள் மிக அண்மைக் காலத்தில் அதிகளவு பாதிப்பை எம் மக்களிடையே ஏற்படுத்தியிருக்கின்றது. இதய நோய், சுவாச நோய்களின் தாக்கங்களும் மிக அதிகரித்தே செல்கின்றது.

ஒரு சாரார் பரம்பரை மீது இதற்கு பழியைப் போடலாம். கால் நூற்றாண்டுக்குள் ஏற்பட்ட இந்த நோய்களின் அதிகரிப்புக்கு பரம்பரை மீது பழியைப் போடுவதை வீண் பழியென்றே கொள்ளலாம்!

வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றம் என்று குறிப்பிடும் போது குறிப்பாக நாம் உண்ணுகின்ற உணவுவகைகளில் ஏற்பட்ட மாற்றமும் உடற்பயிற்சிகள் அற்ற வாழ்க்கை முறையையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக ஒரு திருமண வைபவத்தில் சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்பரிமாறப்பட்ட வடை, முறுக்கு, சீனி அரியதரம், பால்றொட்டி, சிப்பி பலகாரம் போன்றவற்றை இன்று காண்பது அரிது. மாறாக பற்றிஸ், கேக், ரோல்ஸ், பேஸ்ரி என சுத்தமான கோதுமை மா தயாரிப்புகளே பரிமாறப்படுகின்றன. அதே போல் கால்நூற்றாண்டுக்கு முன் குடாநாட்டில் இருந்து துவிச்சக்கரவண்டிகள் இன்று கணிசமாக குறைந்து விட்டன.

திருவள்ளுவர் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணவுதான் நோய்க்கு முக்கிய காரணி என்ற கருத்தை கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மருந்து எனும்95ஆவது அதிகாரத்தில் வள்ளுவர் முத்தான 7 குறள்களின் மூலம் உணவு எவ்வாறு நோயில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்ட கருத்துக்களை அதே ஒழுங்கில் நோக்குவோம்.

***"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று"***

இந்த முதலாவது குறள் உணர்த்துவது என்னவெனில் உணவும், செயலும் மிகுந்தாலும் குறைந்தாலும் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்று நோய்களும் உடலுக்குத் துன்பம் செய்யும் என்பதாகும்.

இதன் மூலம் வள்ளுவர் மூன்று முக்கிய நோய்களை கண்டறிந்துள்ளார் எனும் கருத்தும் உணவு மிகுதியும் குறைவும் நோயை ஏற்படுத்தும் என்பதும் புலப்படுகின்றது.

***"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்"*** என்பது வள்ளுவரின் இரண்டாவது குறள்.

எவனொருவன் முன் உண்ட உணவு செரிந்த பின் அல்லது சமித்த பின் மீண்டும் உணவு உண்ணுகின்றானோ அவனுடைய உடம்பிற்கு மருந்து என்ற ஒன்று தேவைப்படுவதில்லை என்பது இதன் பொருள். எமது பண்டைய மக்கள் இரண்டு அல்லது மூன்று வேளைகளில் மாத்திரமே உணவை உட்கொண்டு வந்திருந்தனர். ஆனால் இன்றைய இளைய சமுதாயம் சற்றே இதிலிருந்து விலகி காணுகின்ற போதெல்லாம் உண்ணுகின்ற ஒரு வழக்கத்தை கைக்கொள்கின்றது என்பது புலப்படுகின்றது.

இந்தக் கருத்தையே மீண்டும் ஒரு முறை தெளிவுபடுத்த முனைகிறார் பொய்யா மொழியார்.

***"அற்றால் அளவு அறிந்து உண்க அஃதுடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு"*** எனும் குறள் மூலம் முன் உண்ட உணவு செரித்த பின் வேண்டிய அளவு உண்பவன் பெற்ற உடம்பை நெடுங்காலம் பேணிப் பாதுகாப்பான் எனக் குறிப்படுகின்றார். அதாவது பசித்து உண்ணும் போதும் அளவு அறிந்து உண்க என்பது இதன் கருப்பொருள்.

பசித்த பின்பு தான் உணவை உண்ண வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய தெய்வப் புலவர் மீண்டும் ஒரு முறை


***"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறு அல்ல துய்க்க துவரப்பசித்து"*** என்ற குறள் மூலம் முன்கண்ட உணவு செரித்த பின் மாறுபாடில்லா உணவைக் கண்டறிந்து நன்றாக பசித்த பின்பு உண்ணவேண்டும் என்ற கருத்தையும் சொல்கின்றார்.


பொய்யாமொழிப் புலவர் தனது நான்காவது குறளாக மருந்து எனும் அதிகாரத்தில் பின்வரும் கருத்தைக் குறிப்பிடுகின்றார்.

***"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு"***

அதாவது மாறுபடும் இல்லாத உணவை அளவோடு உண்டால் உயிர் உடம்பில் உறைவதற்கு ஊறு உண்டாகாது என்பதாகும்.

மாறுபாடு இல்லாத உணவு என்று வள்ளுவர் குறிப்பிடுவது வயதிற்கு ஏற்ற உணவாகவும், ஒருவருக்கு ஒத்துப் போகக் கூடிய அழற்சியையோ அல்லது ஒவ்வாமையையோ உண்டு பண்ணாத





உணவாக இருக்கலாம். இப்படியான உணவைத் தேர்ந்து எடுத்து உண்டால் உயிர் உடம்பில் நெடுநாள் தங்கும். இதனால் தான் மேலும் முனிவர்களும், ரிஷிகளும் நூற்றாண்டுகள் வாழ்ந்ததாக வரலாற்று குறிப்புக்கள் பறைசாற்றுகின்றன.

உணவின் அளவை மீண்டும் ஒரு முறை இடித்துரைக்க வந்த வள்ளுவர் இவ்வாறு தனது 5ஆவது குறளைப் படைத்தார்.

***"இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம் போல் நிற்கும் கழிபேரிரையான்கண் நோய்"***

குறைந்த அளவு உணவு உண்பவனிடம் இன்பம் நிலைத்து நிற்பது போன்று நிறைந்த அளவு உண்பவனிடம் நோய் நிலைத்து நிற்குமாம்.

***"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து"*** எனும் மூத்தோர் வாக்கு உணவுப் பழக்கத்திற்குச் சாலவே பொருத்தமானது.

நோய் ஏற்பட்ட பின் சுவையான, இனிமையான உணவுகளை விட்டு ஒதுக்குவதிலும் பார்க்க நோய் வருமுன்னே அவற்றை அளவோடு சுவைப்பதும் அனுபவிப்பதும் புத்தி சாலித்தனமாகும்.

இறுதியாக ஒருவனுடைய பசி தான் உணவையும் அதன் அளவையும் தீர்மானிக்க வேண்டும் என்று வள்ளுவர் இயம்புகின்றார்.

***"தீயளவு அன்றி தெரியான் பெரிது உண்ணின் நோயளவு இன்றிப்படும்"***

அதாவது பசியின் அளவை அறிந்து உண்ணாமல், சுவை மிகுதியால் அதிகளவு உண்பவனுக்கு அளவில்லாத நோய்கள் உண்டாகும் என்பதாகும்.

ஒரு தோட்டத்தொழிலாளி நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த பின் உண்ணுகின்ற சோற்றின் அளவும் ஒரு வங்கி உத்தியோகத்தர் ஒரு கதிரையில் உட்கார்ந்து வேலை செய்த பின் உண்ணும் சோற்றின் அளவும் ஒன்றாக இருக்க முடியுமா? சுவை என்ற ஒரு புலன் பசியென்ற ஓர் உணர்வை விட மேலோங்குவதனால் ஒருவர் தன்னை மறந்து அளவுக்கு அதிகமான உணவை உள்ளெடுக்க நேரிடுகின்றது. எனவே தான் பசிக்க உண்ண வேண்டும்! பசிக்கு உண்ண வேண்டும்! என்ற கருத்தை தனது 7வது குறளில் முன் மொழிகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

இந்த முத்தான ஏழு குறள்களும் இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தும் எமக்கு மிக பொருத்தமானவையாகவே இருக்கின்றன.

வள்ளுவத்தின் வழி நின்று வாழ்வை வளப்படுத்த நாம் பகுத்துண்ண வேண்டும்! பசித்துண்ண வேண்டும்!

பேராசிரியர் திருநாவுக்கரசு குமணன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் குரங்குகள் சீனாவுக்கு...

இலங்கையிலுள்ள ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவிற்கு அனுப்புவது தொடர்பில் தற்போது இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சீனாவிற்கு ஒரு இலட்சம் குரங்குகள் அனுப்புகின்றமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சமீபத்தில் இலங்கை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார். இந்நிலையில், அமெரிக்கா உள்ளிட்ட மேலும் சில நாடுகளிடமிருந்தும் குரங்குகளை பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாக விவசாய அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் நகர்ப் பகுதிகள் உள்ளிட்ட மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் குரங்குகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

விவசாய அமைச்சின் தரவுகளுக்கு அமைய, நாட்டில் 30 இலட்சத்திற்கும் அதிகமான் குரங்குகள் உள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இவ்வாறு மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலுள்ள குரங்குகள், விளை நிலங்களுக்குள் பிரவேசித்து, பயிர்களை சேதப்படுத்துவதாகவும் அவர் கூறுகின்றார்.

இந்த நிலையில், சீனாவிலுள்ள 1000 மிருகக்காட்சி சாலைகளுக்கு ஒரு இலட்சம் குரங்குகள் கோரப்பட்டதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் கருத்து வெளியிட்டார்.

இந்த கருத்தானது, உள்நாட்டில், மாத்திரமன்றி சர்வதேச ரீதியில் பாரிய பேசு பொருளாக மாறியது.

சீனா, இறைச்சிக்காக குரங்குகளை கோருவதாக சிலர் கூறிய நிலையில், மற்றுமொரு தரப்பினர் ஆராய்ச்சிகளுக்காக குரங்குகளை சீனா கோருவதாகவும் கருத்துரைத்திருந்தார்கள்.

எனினும், அந்த கருத்துக்களை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, மறுத்திருந்தார்.

இலங்கையிலிருந்து ஒரு லட்சம் குரங்குகளை கோரியதாக வெளியான தகவல் தொடர்பில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, இலங்கையிலுள்ள ஒரு இலட்சம் குரங்குகளை தாம் கோரவில்லை என இலங்கையிலுள்ள சீன



தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து குரங்குகளை பெற்றுக்கொள்கின்றமை தொடர்பில் தமக்கு எந்தவொரு கோரிக்கையும் விடுக்கப்படவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கோரிக்கை தொடர்பில் தமது நிறுவனம் எந்தவொரு வகையிலும் அறிந்திருக்கவில்லை என சீனாவிலுள்ள வல விலங்குகள், தாவரவியல் இறக்குமதி, ஏற்றுமதிக்கான அரச திணைக்களமாக விளங்கும் சீன தேசிய வனவியல் மற்றும் புல்வெளி நிர்வாகம் தெரிவித்துள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாம் குரங்குகளை இலங்கையிடமிருந்து கோரவில்லை என சீனத் தூதரகம் வெளியிட்ட அறிக்கை தொடர்பில், விவசாய அமைச்சின் செயலாளர் குணதாஸ சமரசிங்க பதிலளித்தார்.

சீன அரசாங்கத்திடமிருந்து தமக்கு இந்த கோரிக்கை விடுக்கப்படவில்லை எனவும், சீனாவில் மிருகக்காட்சி சாலைகளை நடத்தும் தனியார் நிறுவனமொன்றிடமிருந்தே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் விவசாய அமைச்சின் செயலாளர் குணதாஸ சமரசிங்க தெரிவிக்கின்றார்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை அடுத்து, இந்த நிறுவனத்தின் கோரிக்கை குறித்து ஆராய வேண்டிய கட்டாயம் தமக்கு ஏற்பட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

சீனாவிலுள்ள இந்த நிறுவனம், தமது அமைச்சின் அதிகாரிகளுடன்பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

ஒரு இலட்சம் குரங்குகளை ஒரே தடவையில் அவர்கள் கோரவில்லை என குறிப்பிட்ட அவர், கட்டம் கட்டமாகவே குரங்குகளை அவர்கள் கோரியதாகவும் தெரிவிக்கின்றார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2815

### அகரன்




### அதிசயா

குடித்துவிட்டு வந்த கணவன் தனது மனைவியின் திட்டை சமாளிக்க மடிக்கணினியை எடுத்துகொண்டு வேலை செய்ய துவங்கினான்....!

மனைவி:- குடிச்சிங்களா?

கணவன்: - இல்லம்மா!

மனைவி: -
"குடிகார சனியனே" அப்புறம் ஏன் சூட்கேசை தொறந்து வெச்சு டைப் பண்ற ...!

### அனஸ்கா




### வர்மன்




### அனோஜன்




### தீபன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்டீரியா தொற்றுக்களுடன் பலர் தேசிய கண் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவுகள் மூடல்

(கொழும்பு)

தேசிய கண் மருத்துவ மனையின் அறுவை சிகிச்சை பிரிவுகள் அனைத்தும் திடீரென மூடப்பட்டுள்ளன.

பக்டீரியா தொற்றுக்குள்ளான பல நோயாளிகள் இருப்பதாக கண்டறியப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அவசர சத்திர சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த நோயாளிகளின் உடலில் பக்டீரியா எவ்வாறு சென்றதென்பது எங்களுக்கு குழப்பமாக உள்ளது. அதனை கண்டறிவதற்கான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பக்டீரியா தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படும் மருந்து வகை குறித்தும் தகவல் கிடைத்துள்ளது. அதற்கமைய, அந்த மருந்து உடனடியாக திரும்ப கோர சுகாதார அமைச்சு திரும்ப கோரும் என தான் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## ஜூலை ஒன்று முதல் நலத்திட்ட உதவிகள்

### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

ஜூலை 1 ஆம் திகதி முதல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (4)




## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு சிவாஜி கணேசனின் மகன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்திற்கு நடிகர் திலகம். சிவாஜி கணேசனின் புதல்வர் சிவாஜி கணேசன் ராம்குமார் நாளை முற்பகல் 10 மணிக்கு வருகை தரவுள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 1953 ஆம் ஆண்டு தனது நாடகக் குழுவினருடன் வருகை தந்து "என் தங்கை" எனும் நாடகத்தை அரங்கேற்றி அதன் மூலம் கிடைத்த நிதியை இவ்வைத்தியசாலைக்கு வழங்கி உதவியிருந்தார். இவரது சேவையை வைத்தியசாலை நிர்வாகம் அவ்வேளை பெரிதும் பாராட்டியிருந்தது.

இந் நிலையில் அவரால் செய்யப்பட்ட சேவையை பாராட்டும் முகமாக சிவாஜி கணேசன் ராம்குமாரிற்கு வைத்தியசாலையில் வரவேற்பளிக்கப் படவுள்ளது. (4)


**மணமகன் தேவை**

1993, இந்து,திருவாதிரை, Doctor. வவுனியா,பதிவு # 8645. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04 www. EQ Marriage Service.com அழையுங்கள் 076 664 9401. (சி-1984)

**மணமகன் தேவை**

1991, இந்து,ரோகினி, Doctor. தலவாக்கலை ,பதிவு # 8570. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04 www. EQ Marriage Service.com அழையுங்கள் 076 664 9401. (சி-1984)

**மணமகள் தேவை**

1985. இந்து.பூராடம். Doctor. பருத்தித்துறை ,பதிவு # 8586. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04 www. EQ Marriage Service.com அழையுங்கள் 076 664 9401. (சி-1984)

**மணமகள் தேவை**

1989. இந்து.மூலம். Doctor. பருத்தித்துறை ,பதிவு# 8557. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04 www. EQ Marriage Service.com அழையுங்கள் 076 664 9401. (சி-1984)


உ
சிவமயம்
ஓம் நமசிவாய

## யாழ்ப்பாணம் வண்ணை வாலாம்பிகாசமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி மஹா கும்பாபிஷேக கிரியைகள் இன்று சுபவேளை ஆரம்பம் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் மக்கள் வழிபாட்டால் தேவரும், வானவரும் சித்தர்களும் வாழ்த்த வருவார்கள்.

**முன் இருந்தார் முழு தெண்கணத் தேவர்கள்**
**எண்ணிறந் தன்பால் வருவார் இரு நிலத்து**
**எண்ணிரு நாலு திசையந்தர மொக்கப்**
**பன்னிரு காதம் பதஞ் செய்யும் பாரே...**

*திருமூலர்-1881*

சிவபூசையில் முன் நிற்கின்ற பதினெட்டு கணங்களை கொண்ட தேவர்களும், எல்லையற்ற அளவிட்டுக் கூற முடியாத அன்பால், இந்த மண்ணுலகம் வருவர். இப்படி வானுலகத்தவர் எல்லாம் வருதலால் எட்டுத் திசையும் **வானுலகம் போலச் சோதி மயமாக விளங்க** பன்னிரண்டு காத எல்லை வரை உள்ளவர்கள் **நற்கதி அடையப் பெறுவர்**,நன்மை உண்டாகும்,வானவரும் வந்து மானிடர் பூசைக்கு மகிழ்ந்து ஆசி கூறுவர்.

எத்தனை கோடி, கோடிக்கணக்கான உடலை விட்டும் (புது) உடலில் ஓடிப்புகுந்தும், ஆடியும், இங்கனம் எத்தனை கோடி(ப்பிறப்பு) வந்து போய் விட்டது. தேவர்களும் மாதர்களும்,**சித்தர்களும்,** தொண்டர்களும் வணங்க "வாளாம்பிகை" (தையல் நாயகி) என்றும் திருநாமமுடைய தேவியை தமது பாகமாக்கிய ஸ்ரீ வைத்தீஸ்வரன் சுவாமி தேவஸ்தானம் தலத்தை மகிழ்ந்த பெருமானே முருகனே நமக்கு உற்ற துணையாகும்.

பல சித்தர்கள், யோகர் சித்தரும் நடமாடிய வைத்தீஸ்வரன்.



பிணியைக் (பிறவிப்பிணி) கொள்ளும் உடலைவிட்டு விட வேண்டும். இப் பிறவியைப் பெற்றுள்ளவர்களே (மானிடப்பிறவி) ஆலயத்தில் நானாவகையான ஊர் வம்புகளைப் பேசி வாழ்நாளை வீண் நாளாக்காமல் எப்போதும் பயனுடைய சொற்களைப் பேசி, வாழ்நாளை புனிதமாகச் செய்து, இம்மையில் புகழும்,மறுமையில் புண்ணியமும் பெற்று உய்வோமாக.

**மானிடம் செழிக்க மாமழை பொழிந்த அருளாளர்களை வணங்கி திருமுறைகளை ஓதி வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில், ஆசார சீலராகச் சென்று வணங்கிப் போற்றி நற்கதி அடைவோமாக**

ஓம் நமசிவாய



புதன் காலை 26.04.2023
மஹா கும்பாபிசேகம்
பார்த்து மகிழ்ந்து
சிவ அருளாகிய நற்கதி
பெறுவோம்
"ஓம் நமசிவாய"

(சி-6407)

க.கு.க.சிவபாலன் (K.K.K)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 131

### எனது மகள் இருப்பதை விட இறப்பதே நல்லது

நான் எனது மேல் படிப்புக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடமை புரியும் போது நடந்த சம்பவம். எனது விடுதியில் நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது எனது தொலைபேசி அழைத்தது. அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து (ETU) வந்த அழைப்பு அது. "சேர்.. அவசரமாக வாருங்கள். 18 வயதுடைய பெண் ஒருவர் மிக மோசமான நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டு இருக்கிறார்" என மறுமுனையில் வைத்தியர் தெரிவித்தார்.

மின்னல் வேகத்தில் அவசர சிகிச்சைப் பிரிவை நோக்கி ஓடினேன். ETU க்கு வெளியே பெரிய ஒரு கூட்டம் அழுகையுடனும் கவலை தோய்ந்த முகத்துடனும் நின்று கொண்டிருந்தார்கள். அவசரமாக எல்லோரையும் விலக்கிக் கொண்டு ETU க்கு உள்ளே போனேன். என்னைக் கண்டதும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான வைத்தியர் என்னிடம் குறித்த நோயாளியைப் பற்றிக் கூற ஆரம்பித்தார். " இந்த பெண் பிள்ளைக்கு 18 வயது. நேற்று இரவு வெளியே போய் வந்த பிறகு கொஞ்சம் வித்தியாசமாக இருந்திருக்கிறார்.

இரவு படுத்த பிள்ளை இன்னும் எழும்பவில்லை என்று பெற்றோர் சொல்கிறார்கள். வைத்தியசாலைக்கு வர முன் வலிப்பு ஏற்பட்டு கை கால் அடித்ததாகவும் வாயால நுரை வந்ததாகவும் சொன்னார்கள்" என அவர் தெரிவித்தார்.

எதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கும் என்ற எண்ணத்துடன் அந்த நோயாளியை பரிசோதிக்க ஆரம்பித்தேன். மெலிந்த தோற்றமுடைய, தலைமுடியை பல நிறங்களால் டை பண்ணிய கண் புருவங்களை வெட்டிய மொடர்னான அந்த பெண் முற்றாக உணர்வற்றவராக கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தார்.

பெயர் சொல்லும் போதோ, தட்டி எழுப்பும் போதோ எந்தவித அசைவுமில்லாத ஆழ்ந்த உறக்கம் அது.பக்கத்திலிருந்த வைத்தியர் "பல் எல்லாம் கலர் மாறி கறுப்பா இருக்கு. எனாமல் எல்லாம் தேய்ஞ்சு போய் இருக்கு. வாயில நிறைய காயம் இருக்கு. இப்படி மொடர்னான பெண்ணுக்கு 80 வயது கிழவியைப் போல பல் இருப்பது ஏன்" என கேட்டார். மேலும் அப்பெண்ணின் இடது கையின் மணிக்கட்டுப் பகுதியில் பல கீறல் அடை யாளங்களும் காணப்பட்டன. (இப்படியான அடையாளங்கள் தற்கொலைக்கு முயற்சித்தவர்களின் உடல்களில் காணப்படுவதுண்டு). ஆரம்ப கட்ட பரிசோதனைக்குப் பிறகு இந்த பெண், எக்டசி என்ற மாத்திரையை எடுத்திருக்க வேண்டும் என சக வைத்தியர்களிடம் கூறினேன்.

இந்த மாத்திரை போதைப்பொருளுக்கு அடிமையாகியவர்கள் போதையை ஏற்படுத்துவதற்காக பாவிப்பது. இதனால் பல மரணங்கள் ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்துள்ளன. இலங்கையிலும் இதன் பாவனை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றது.

இந்த நோயாளிக்கு உடனடியாக சில இரத்த மாதிரிகளை எடுக்குமாறும் காய்ச்சலைக் கட்டுப்படுத்த மருந்துகளை ஆரம்பிக்குமாறும் கூறி ஒட்சிசன், சேலைன் மேலும் சில மருந்துகளை வழங்கி விட்டு பெற்றோர்களை சந்திக்க நகர்ந்தேன்.

"இவ எங்கிட ஒரே பிள்ளை" என ஆங்கிலத்தில் உரையாடலை தொடர்ந்தார்கள். நல்ல வசதியான குடும்பம், பெற்றோர்கள் இருவரும் நன்கு படித்தவர்கள் என தெளிவாக விளங்கியது.

"என்ன டொக்டர்... எப்படி இருக்கா" என பெரியதொரு பரபரப்பில்லாமல் அந்த பெற்றோர்கள் கேட்டது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. "மோசமான நிலைலதான் இருக்கா, போதைப் பொருள் ஒன்றை எடுத்திருக்கா போல, ட்ரீட்மென்ட் ஸ்டார்ட் பண்ணிருக்கோம்" என நான் பதிலளித்தேன்.

"இவ எங்கிட ஒரே பிள்ளை என்டதால நல்லா செல்லம் குடுத்து வளர்த்திட்டம். சின்ன வயசில என்ன கேட்டாலும் வாங்கிக் குடுப்பம், எங்க வேணும்னாலும் கூட்டிப் போவம்.

இவ நல்ல கெட்டிக்காரி. ஸ்கூல்ல எல்லாத்திலயும் பெஸ்ட்தான். இவட டீச்சர்ஸ் கூட எங்கள கூப்பிட்டு இவள நிறைய தரம் பாராட்டி இருக்கா. இவய பத்தி நாங்களும் பெருமையா எல்லார்டயும் பேசுவோம். O/L மட்டும் நல்லாத்தான் படிச்சா, 9A ரிசல்டும் எடுத்தா. கொஞ்ச நாள் போன பிறகு அவக்கு படிப்புல விருப்பமே இல்ல. ஒரே எரிச்சலுடன்தான் இருப்பா. நாங்க என்னயும் கேட்டா ஒரே சண்டைதான். அவக்கு நாங்க வேறயா பாங்ல காசு போட்டு கொடுத்து வெச்சிருந்தம். பிறகு நாங்க எக்கவண்ட் செக் பண்ணி பார்த்த நேரம் பேங்ல காசு ஒன்டும் இல்ல, எல்லாத்தையும் எடுத்திட்டா.

நைட் கிளப் பார்ட்டி என்டு போக ஆரம்பிச்சா. குடிக்கிரத்தயே தொழிலா செய்தா. நாங்களும் எவ்வளவு ட்ரை பண்ணிப்பார்த்தோம் ஆனா அவ கேட்கிற மாதிரி இல்ல. நாங்க என்ன டொக்டர் செய்ர, ஒரே பிள்ளை இப்டி ஆயிட்டு, இவ செத்தாலும் பரவாயில்ல" என கவலையுடன் கூறி முடித்தார். (ஒரு தாய் தனது பிள்ளை செத்தா நல்லம் என்று கூறியது எனக்கு ஆச்சரியமாகவும் புது அனுபவமாகவும் இருந்தாலும், எந்த அளவுக்கு அவர் பாதிக்கப்பட்டிருப்பார் என தெளிவாகக் காட்டியது) எனினும் தீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்துப் பார்ப்பதாக கூறி அவர்களிடம் இருந்து விடை பெற்றேன்.

ஒரு மணித்தியாலம் செல்லவில்லை எனது போன் ரிங் செய்தது. மீண்டும் ETU இல் இருந்து என்னை அவசரமாக வருமாறு அழைப்பு. நான் அங்கே போன போது அந்த யுவதியின் இதயம் தாறுமாறாக இயங்குவதாகவும் ECG இல் Ventricular Tachycardia இருப்பதாகவும் உடனடியாக கரண்ட் சொக் கொடுக்கப் போவதாகவும் கூறி உடனடியாக வழங்கப்பட்டது.

வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்களும் இந்த உயிரை எப்படியும் காப்பாற்றி விட வேண்டும் என்ற நோக்கில் போராடிக் கொண்டிருந்தார்கள். என்ன செய்வது இறைவனின் நியதியை மாற்ற முடியுமா, பல மணி நேர போராட்டத்தின் பின் அந்த யுவதி இறந்ததை மருத்துவ குழாம் உறுதி செய்தது. எனது மருத்துவ வாழ்நாளில் கண்ட மரணங்களில் மிக மோசமான மரணமாக இதை ஒன்றைக் குறிப்பிடலாம்.

# வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து வன்முறை கும்பல் அட்டகாசம்

(குருமன்காடு)


வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையத்தினுள் வன்முறைக் கும்பல் புகுந்து வர்த்தகரை தாக்கியதில் வர்த்தகர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு முன்பாக மூவர் அடங்கிய வன்முறை கும்பல் ஒன்று சிறுநீர் கழித்துள்ளனர். இதன் காரணமாக குறித்த வர்த்தக நிலைய வர்த்தகரால் இவ்விடத்தில் சிறுநீர் கழிக்காது அருகில் உள்ள பொது கழிப்பறைக்கு செல்லுங்கள் என தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த கும்பலினால் வர்த்தகர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், ஏனைய இருவரை கைது செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.(4-250)




இஸ்லாமிய மக்கள் நேற்று சனிக்கிழமை புனித நோன்பு பெருநாளை கொண்டாடினர் அந்த வகையில் மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளி வாசலில் நேற்றைய தினம் சனிக்கிழமை நோன்பு பெருநாள் தொழுகைகள் இடம் பெற்றன. காலை 6.45 மணிக்கு பெண்களுக்கும் காலை 7.30 மணியளவில் ஆண்களுக்கும் பெருநாள் தொழுகை இடம் பெற்றது.
(படம்-ஜோசப்நயன்)

# முல்லைத்தீவில் கடும் காற்று வீடுகள் சில சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 20 ஆம் திகதி மாலை ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்துஐயன்கட்டு கிராம அலுவலர் பிரிவில் ஜீவ நகர் மாதிரி கிராமத்தில் வீசிய கடும் காற்றினால் வீடுகள் சில சேதமடைந்துள்ளன.



இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை வீசிய காற்றினால் முத்துஐயன்கட்டு-முத்துவிநாயகபுரம் பகுதியில் மேலும் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

ஓடுகள் தூக்கிவீசப் பட்டுள்ளதுடன் தற்காலிக கொட்டிலில் வசித்துவரும் குடும்பம் ஒன்றின் வீடும் காற்றினால் சேதமடைந்துள்ளது.

கடந்த நாட்களாக கடும் வெப்பம் நிலவிய நிலையில் இரண்டு தினங்களாக குறித்த பகுதியில் கடும் காற்றும் மழையும் பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் அருள்மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினம் இடம் பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 250 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 | 300 |
| தக்காளி | 100 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| கோவா | 180 | 180 | 180 | 240 |
| கரட் | 120 | 220 | 150 | 300 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 |
| புடோல் | 140 | 120 | 140 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 130 |
| பாகற்காய் | 350 | 300 | 100 | 300 |
| வெண்டக்காய் | 200 | 160 | 160 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 300 | 260 | 300 | 300 |
| பீற்றூட் | 240 | 200 | 180 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 400 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 280 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 240 | 250 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | 50 |
| முள்ளங்கி | 100 | 100 | — | 240 |
| பொன்னாங்காணி | 80 | 120 | — | 50 |
| வல்லாரை | 40 | 25 | 20 | 50 |
| ஈரப்பலா | 100 | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்கள் முட்டாள்களின் நாட்டில் பட்டினியாய் இருப்பதில்லை

~ சர்ச்சில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# நெடுந்தீவில் நடந்த கொடூரம் உண்மை வெளிப்பட வேண்டும்

நெடுந்தீவில் ஐந்து பேர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டதான சம்பவத்தை அறிந்தபோது இதயம் உறைந்து போனது.

ஆ! எத்தனை கொடூரம். கொல்லப்பட்ட ஐந்து பேரில் மூவர் பெண்கள். இருவர் ஆண்கள். அதிலும் அனைவரும் 75 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இதுதவிர, சம்பவத்தின்போது நூறு வயதுடைய மூதாட்டி வெட்டுக் காயங்களுக்கு ஆளாகியுள்ளார்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களும் படுகாயமடைந்தவரும் முதுமையானவர்கள்.

இப்படியாக நிலைமை இருக்கும்போது, முதுமை நிறைந்த ஐந்து பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனில், நூறு வயதுடைய மூதாட்டி வெட்டிப் படுகாயப்படுத்தப்பட்டுள்ளாராயின், அந்தச் சம்பவம் மிகக் கொடூரமானதும் இந்த நாட்டின் பொலிஸ் சேவைக்கு அவமானத்தை ஏற்படுத்துவதுமாகும்.

ஆம், நெடுந்தீவு என்பது ஆழ்கடல் மத்தியில் உள்ள ஒருபெரும் தீவு.

இதற்கென தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவும் பிரதேச சபையும் பொலிஸ் கிளை அலுவலகமும் உள்ளன.

இதுதவிர, நெடுந்தீவு முழுவதும் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அதிலும் கொலைச் சம்பவம் நடந்த இடம் நெடுந்தீவின் இறங்குதுறையை அண்மித்த, கடற்படை முகாம் அருகில் இருக்கக்கூடியதான குறிச்சி.

இவ்வாறு பாதுகாப்பு நிறைந்த இடத்தில் மூன்று வயோதிப் பெண்களும் இரண்டு வயோதிப ஆண்களும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் எனில் இதையிட்டு இலங்கை வெட்கித் தலைகுனிய வேண்டும்.

தவிர, இலங்கையில் முதியவர்களின் பாதுகாப்பு எவ்வாறாக உள்ளது என்பதை இதிலிருந்து யாரும் அறிந்து கொள்ள முடியும்.

உண்மை. குற்றச் செயல்கள் நடக்கும் போதெல்லாம் இலஞ்சத்தோடு அவற்றை மறைத்து விடுவதில் இலங்கைப் பொலிஸ் தரப்பு நாட்டம் கொண்டதன் காரணமாக, குற்றச்செயல்கள் சர்வசாதாரணமாயிற்று.

இதன் அடிப்படையில் யாருக்கும் அஞ்சாத – தண்டனைக்குப் பயப்படாத ஈனத்தனம் தாண்டவமாடத் தலைப்பட்டுள்ளது.

இதன் விளைவுதான் ஐந்து வயோதிபர்கள் கண்டபாட்டில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஈனச் செயலில் யார் ஈடுபட்டிருந்தாலும் அவர்களுக்கு பொதுவெளியில் வைத்து மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இந்தத் தண்டனையை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அதைச் செய்தாக வேண்டும்.

இல்லையேல் ஈனர்களின் இக்கொடூரக் கொலைச் செயல்கள் நீடிக்கவே செய்யும்.

ஆகையால் பொலிஸார் இதுவிடயத்தில் நேர்மையுடன் செயலாற்றுவது அவசியமாகும்.

# பொருளாதார கொள்கை தயாரிப்பு பணிகள் எதிர்வரும் மாதத்திற்குள் நிறைவு பெறும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தை வலுவாக்குவதற்கான பொருளாதார முகாமைத்துவக் கொள்கை தயாரிப்பு பணிகள் எதிர்வரும் மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும் எனஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தப் பொருளாதார முகாமைத்துவக் கொள்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளின் போது கடன் வழங்குநர்களுக்கு நமும் பங்களிப்புக்களை வழங்க வேண்டியது அவசியமாகும்.கடன்மறுசீரமைப்புக்களை செய்ய தவறும் பட்சத்தில் நாம் கடுமையான நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும். எவ்வாறாயினும் இந்தச் செயற்பாட்டிற்கான மாற்று வழிகள் மக்களுக்கு நெருக்கடியாக அமைந்திருக்காது என்ற உறுதியை வழங்குவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதற்காக இம்மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்திற்கு பாராளுமன்ற அனுமதியைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ள அதேநேரம், மே மாத இறுதிக்குள் பொருளாதார முகாமைத்துவக் கொள்கை தயாரிப்புபணிகளை நிறைவு செய்யவும் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7,9)

# பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணத்தை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை போக்குவரத்து சேவைக் கட்டணத்தை, குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைகளை வழங்கும் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

05 முதல் 08 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் பாடசாலை போக்குவரத்து சேவைக் கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இந்த கட்டண குறைப்பானது எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ம-7,9)

# புத்தாண்டு நிகழ்வில் 10 வயது சிறுவன் பலி

அநுராதபுரம் - கெக்கிராவ பகுதியில் இடம்பெற்ற புத்தாண்டு நிகழ்வில் பங்கேற்றிருந்த 10 வயதான சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

15 வயதான தமது சகோதரருடன் ஒட்டப் பந்தயத்தில் பங்கேற்றிருந்த குறித்த சிறுவன் ஓடிக் கொண்டிருந்த நிலையில் கீழே வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் அவர் கலாவெவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக தற்போது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காவல்துறையினர் முன்னெடுத்துள்ளனர்.(ம-7,9)

# துப்பாக்கியால் சுட்டு 15 வயது சிறுவன் பலி

(அம்பாறை)

அம்பாறை பண்டாரதுவ, மாயாதுன்ன பிரதேசத்தில் நேற்று முன்தினம் 15 வயது சிறுவன் ஒருவன் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளான்.

அவர் தனது வீட்டில் 12 போர் ரக துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தின் போது பலத்த காயமடைந்த சிறுவன் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளான். (ம-7,9)

# பெரமுனவின் தீர்மானங்கள் சட்டவிரோதம் : நீதிமன்றம் செல்வேன்

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் சபை கூட்டத்தில் எடுத்த தீர்மானங்கள் சட்டவிரோதமானவை. தீர்மானங்களை செல்லுபடியற்றதாக்கும் வகையில் நீதிமன்றத்தை நாடுவேன் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் சனிக்கிழமை (22) காலை இடம்பெற்ற பொதுச் சபை கூட்டம் சட்டத்திற்கு ஏற்புடையதல்ல,கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் முறையற்றதுடன் அவை செல்லுபடியாகும் தன்மை முறையற்றது.

பொதுச்சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் சட்டவிரோதமானது என்பதை அறிவிக்கத் தேவையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 2023 ஆம் ஆண்டுக்கான பொதுச் சபை கூட்டத்தில் தவிசாளர் பதவியில் இருந்து ஜி.எல்.பீரிஸ் நீக்கப்பட்டு,சிரேஷ்ட பேராசிரியர் உதுராவெல தம்மரதன தேரர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம-7,9)

# சகல தேர்தல்களையும் எதிர் கொள்ளத் தயார்

## மகிந்த தெரிவிப்பு

எந்த நேரத்திலும், எந்த தேர்தல் இடம்பெற்றாலும் அதனை எதிர் கொள்ள தயாராகவுள்ளோம்.. கட்சி என்ற ரீதியில் அனைத்து சவால்களையும் வெற்றிக் கொள்வோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வருடாந்த பொதுச்சபை கூட்டம்நேற்று சனிக்கிழமை (22)நெலும் மாவத்தையில் உள்ள கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது. கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கட்சி தீர்மானத்துக்கு அமைய புதிய தவிசாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.ஏனைய பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. தற்போதைய பதவி நிலையே தொடரும் என்றார்.

அத்துடன் எந்த நேரத்திலும்,எந்த தேர்தல் இடம் பெற்றாலும் அதனை எதிர் கொள்ள தயாராகவுள்ளோம்.கட்சி என்ற ரீதியில் சகல சவால்களை யும் எதிர்கொள்வோம் என்றார். (ம-7,9)

# வெப்பநிலை தொடர்பில் கர்ப்பிணிகளுக்கு எச்சரிக்கை

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக கர்ப்பிணி தாய்மார்கள் அதிகம் பாதிக்கப்படலாம் என வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.


காய்ச்சல் வைத்தியசாலையின் மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் நிபுணர் வைத்தியர் பேராசிரியர் சனத் லெனரோல் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.கர்ப்பிணித் தாய்மார்கள் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

மதிய நேரத்தில் வீட்டை விட்டு வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும். முடிந்தவரை வீட்டிலேயே இருங்கள். நீங்கள் வழக்கமாக 2 லிட்டர் தண்ணீர் குடித்தால், சுமார் 3 முதல் 4 லிட்டர் தண்ணீர் குடியுங்கள். என்னவென்றால் இந்த வெப்பம் காரணமாக உங்களது உடலில் நீரிழப்பு ஏற்படக்கூடும் என்றார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024



**அரசியல் முதல் ஆன்மிகம் வரை அறிந்து வைத்திருக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

சகலகலா வல்லவர்களாக விளங்கும் உங்களுக்கு இந்த சோபகிருது புத்தாண்டு ஏழரைச்சனி விலகியபிறகு பிறப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இனித் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள் விலகிச் செல்வர். கெட்டிமேளம் கொட்டும் வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்தவர்களுக்கு அது கைகூடும். கண்ணேறுபடும் விதத்தில் உங்கள் முன்னேற்றம் அமையப் போகிறது. ஏப்ரல் 22 ஆம் திகதி குரு பகவான் மேஷ ராசிக்குச் செல்கின்றார். அதன் பார்வையும் உங்கள் ராசியில் பதியப் போகின்றது. எனவே ஆண்டு முழுவதும் உங்களுக்கு

# உறவினர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும்!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

வேண்டிய நற்பலன் கிடைக்கப் போகிறது. ஆரோக்கியம் சீராகும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புதிய முயற்சிகளில் வெற்றி காணப் போகின்றீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பதவிகள் கிடைக்கும். வீடு தொடர்பான வில்லங்கங்கள் விலகும். புத்தாண்டில் மூன்று முறை சனி, செவ்வாய் பார்வை ஏற்படுகின்றது. அந்த நேரங்களில் மட்டும் கவனமாக இருப்பது நல்லது. 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றார்கள். அதன் விளைவாக ஒரு சிலருக்கு தொழில் மாற்றங்கள், இடமாற்றங்கள் வரலாம். பெற்றோர் உடல்நலத்தில் கவனம் தேவை. முயற்சிகளில் தடை ஏற்படாமலிருக்க முன்னெச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது. உங்கள் ஜாதகத்தில் வலிமை வாய்ந்த திசா புத்தி நடைபெறுமேயானால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. அல்லாத பட்சத்தில் காரியத் தடைகள் வந்து அலைமோதும். அதுபோன்ற காலங்களில் தெய்வ வழிபாடுகளை முறையாக மேற்கொண்டால் திருப்தியான வாழ்க்கை உங்களுக்கு அமையும்.

**குருப்பெயர்ச்சி!**

சித்திரை 9 ஆம்திகதி (22.04.2023) அன்று மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். அப்போது அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவதோடு 9, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது. எனவே அந்த இடங்கள் புனிதமடைகின்றது. ஜென்ம ராசியைக் குரு பார்ப்பதால் உடல் நலமும் மன நலமும் சிறப்பாக இருக்கும். உறவினர் வழியில் இருந்த பிரச்சினைகள் அகலும். வாகன யோகம் வந்து சேரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குருவின் பார்வை 9, 11 ஆகிய இடங்களில் பதிவதால் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும். நினைத்ததை செய்ய நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர். உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோஷச் செய்திகள் வந்து சேரும். மருத்துவச் செலவுகள் குறையும். வாய்தாக்கள் ஓயும். புதிய கிளைத் தொழில்கள் தொடங்கி தொழில் வளத்தைப் பெருக்கிக் கொள்வீர்க்ள. இந்த நேரத்தில் உங்கள் குடும்ப உறுப்பினர்களின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு எல்லாவற்றையும் வாங்கி மகிழ வருமானம் உயரப் போகின்றது. வெளிநாடு செல்லும் யோகமும் ஒருசிலருக்கு கைகூடும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல காரியங்களை முடித்துக் கொடுப்பர். பிள்ளைகளால் வந்த பிரச்சினைகள் அகலும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். செய்தொழிலில் எதிர்பார்த்ததை விடக் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகள் நெருக்கமாகி வேண்டிய சலுகைகளை வழங்குவர்.

**கும்பச் சனி!**

கிரகங்களில் வலிமை வாய்ந்த கிரகம் சனியாகும். உங்கள் ராசிக்கு நடைபெற்று வந்த ஏழரைச் சனி, ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாகவே விலகி விட்டது. எனவே இந்த ஆண்டு உங்களுக்கு எல்லா வழிகளிலும் நன்மை கிடைக்கப் போகின்றது. தொழிலில் இருந்த தொய்வு அகலும். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். முக்கியப் புள்ளிகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஊர் மாற்றங்களும் வீடு மாற்றங்களும் உறுதியாகலாம். கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். இக்காலத்தில் சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் நன்மைகள் நடைபெறும். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரமும் பெறுகின்றார். பின்னர் 24.08.2023 முதல் மகரத்திற்கு வந்தும் சனி வக்கிரம் பெறுகின்றார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்கு முறையாகப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். இந்த வக்கிர காலத்தில் கொஞ்சம் கவனமாகச் செயற்பட வேண்டும். பணப்புழக்கத்தில் இருந்த வளர்ச்சி நிலைமையும் இனத்தார் பகையும் எதிர்பாராத வழக்குகளும் வரலாம். கனத்த இதயத்தோடு காட்சி தரும் நேரமிது. நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் நடைபெறாமல் போகலாம். பொன், பொருட்கள் வாங்குவதிலும் புதிய முயற்சிகளில் ஈடுபடுபவர்களும் காலதாமதத்தை தவிர்க்க இயலாது. எதிர்ப்புகளுக்கு மத்தியில் வாழ்க்கை அமையும். நிச்சய தார்த்தம் செய்த திருமணம் நிகழ்வது




கூட தாமதப்படலாம். எச்சரிக்கையோடு செயற்பட வேண்டிய நேரமிது.

**ராகு-கேது பெயர்ச்சி!**

08.10.2023 அன்று மீன இராசியில் ராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இக்காலத்தில் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் ராகுவும் 10 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போவதால் வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் வரலாம். விரயங்கள் அதிகரிக்கும். "பாடுபட்டுத் தேடிய பணம் பலவழிகளிலும் விரயமாகின்றதே" என்று கவலைப்படுவீர்கள். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. உடல் நலத்திலும் திடீர் திடீரென பாதிப்புகள் ஏற்படலாம். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் திகைக்க வைக்கும். உறவினர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாக தெரியும். சொத்துப் பிரச்சினைகளும் சொந்தங்களின் அனுசரிப்பும் குறையும். இக்காலத்தில் சர்ப்பசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்வது நல்லது. 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் பதவி மாற்றங்கள் வரலாம். சாதாரண உத்தியோகமாக இருந்தாலும் உர்யமட்ட அதிகாரியாக இருந்தாலும் அரசியல் களத்தில் இடம்பெற்றவர்களாக இருந்தாலும் வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வது நல்லது. புது ஒப்பந்தங்கள் வந்தாலும் கையெழுத்திடும் பொழுது கவனம் தேவை. பெற்றோர்களின் உடல்நலத்தில் அக்கறை செலுத்துவது அவசியம். பிரச்சினைகளை சந்திக்கும் பொழுது ஆரம்பத்திலேயே தீர்வு காண்பது உத்தமம். அதை வளரவிடக்கூடாது.

**வளர்ச்சி தரும் வழிபாடு!**

புத்தாண்டில் புதுமை படைக்க சனிக்கிழமை தோறும் சனி கவசம் பாடி சனி பகவானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்!**

புத்தாண்டின் தொடக்கம் மகிழ்ச்சியாக இருக்கும். பொருளாதார பற்றாக் குறை அகலும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு நல்ல காரியங்கள் இல்லத்தில் படிப்படியாக நடைபெறும். வீடு, இடம் வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஒருசிலருக்கு உருவாகலாம். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள், ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவலும் உண்டு. பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி செலவிடுவீர்கள். அவர்களின் கல்வி மற்றும் கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

**குரு-சனி வக்கிரம்!**

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதனாகவும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் வக்கிரம் பெறும் பொழுது ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். அதைச் செய்வோமா? இதைச் செய்வோமா? என்ற மனக்குழப்பம் காண்பீர்கள். தெம்பு குறைந்து திடீர் தாக்குதல்கள் உடல்நலத்தில் உருவாகும். வம்பு, வழக்குகள் வாசல் தேடி வரும். நண்பர்கள் கூட பகையாகலாம். நாடு மாற்றங்களும் வீடு மாற்றங்களும் திருப்தி தராது. கடன் பிரச்சினை தலைதூக்கும். 27.06.2023 முதல் 23.08.2023 வரை கும்ப இராசியிலும் பிறகு 24.08.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் முயற்சிகளில் முட்டுக்கட்டைகள் ஏற்படும். வளர்ச்சிக்கு குறுக்கீடாக பலரும் வந்து நிற்பர். குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றத்தை சந்திக்க நேரிடும். "சரிந்து போன வாழ்க்கை சம நிலை அடைய என்ன செய்யலாம்" என்ற கவலை ஒருபுறம், "தங்கம்-வெள்ளி இல்லத்தில் தங்கவில்லையே" என்ற கவலை மற்றொரு புறம் காணப்படும். இறை நம்பிக்கையோடு எதையும் செய்ய வேண்டிய நேரமிது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடியாக...

அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் வட மாகாணத்திற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, நெடுந்தீவு பகுதியில் சந்தேகத்திற்கு இடமான நடமாட்டங்கள் தொடர்பாகவும், நெடுந்தீவை விட்டு வெளியேறியவர்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும் இந்த கொலைகள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட்டு, மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அச்சத்தினை விரைவில் தீர்க்க வேண்டிய அவ்சியத்தினையும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,33)

## நீதவானை வழி...

போராட்டம் நடத்தியதால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

ஊர்காவற்றுறை நீதவான் நெடுந்தீவில் படுகொலை இடம்பெற்ற இடத்திற்கு விஜயம் மேற்கொண்டு சடலங்களை பார்வையிட்டுள்ளார்.

கடற்படையின் விசேட படகின் மூலம் ஊர்காவற்றுறை நீதவான், சட்ட வைத்திய அதிகாரி மற்றும் விசேட பொலிஸ் அணிகள் நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளன.

இதன்போது சடலங்களை பார்வையிட்டு நீதவான் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியபோது நெடுந்தீவு மக்கள் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு இறங்குதுறையில் ஒன்று கூடிய மக்கள் குற்றவாளியை உடனடியாக கைது செய்யுமாறு கோரி அதிகாரிகளை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தனர். (ம-7,9,33,104)

## படகு சேவை...

வதை தடுக்கும் வகையில் குறித்த படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம-7,9,33)

## சம்பவ இடத்தில்...

நெடுந்தீவுக்கு நேரில் சென்று சம்பவ இடத்தினை நேரில் பார்த்து விசாரணைகளை முன்னெடுத்தார்.

அதேவேளை யாழ்ப்பாண தடயவியல் பொலிஸ் குழுவும், சட்ட வைத்திய அதிகாரியும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-7,9,33,104)

## சடலங்கள்...

இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், உடற்கூற்று பரிசோதனைக்காக சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (ம-7,9,33)

## நெடுந்தீவில்...

சந்தேகத்தின் அடிப்படையிலே கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் படுகொலை செய்யப்பட்டவர்களின் வீட்டில் தங்கியிருந்த நபர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அவர் புங்குடுதீவினை சேர்ந்தவர் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (ம-7,9)

## 5 வயோதிபர்கள்...

இதில் நெடுந்தீவைச் சொந்த இடமாகக் கொண்ட கார்த்திகேசு நாகசுந்தரி (வயது-81), வேலாயுதபிள்ளை நாகரத்தினம் (வயது-83), நாகநாதி பாலசிங்கம் (வயது-83), பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை (வயது-76), சுப்பிரமணியம் மகாதேவன் (வயது-78) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

நெடுந்தீவில் நேற்றைய தினம் நடந்த இக்கொடூரக் கொலை சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நெடுந்தீவு இறங்குதுறை அமைந்துள்ள மாவலித்துறையில் 81 வயதான திருமதி கார்த்திகேசு நாகசுந்தரி என்பவர் தனது வீட்டில் வசித்து வந்துள்ளார்.

புத்தாண்டு மற்றும் ஆலயத் திருவிழா என்பவற்றை முன்னிட்டு லண்டனில் வசிக்கும் அவரது சகோதரி திருமதி வேலாயுதபிள்ளை நாகரட்ணம் (வயது-83), பாண்டியன்குளத்தில் வசிக்கும் அவரது சகோதரி திருமதி பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை (வயது-76), அவரது கணவர் நாகநாதி பாலசிங்கம் (வயது-83), யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கனகரட்ணம் பூரணம் (வயது-100) ஆகியோர் சகோதரி கார்த்திகேசு நாகசுந்தரியின் வீட்டுக்கு சென்று அங்கு தங்கியிருந்துள்ளனர்.

இவர்களுடன் நெடுந்தீவில் வசித்து வந்த அவர்கள[illegible] மணியம் ம[illegible] (வயது-78) என்பவரும் குறித்த வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

நேற்றுக் காலை அவர்களின் சிறிய மகனாகிய தயாபரன் யாழ்ப்பாணத்தில் இருந்து அவர்களுக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்துள்ளார்.

எனினும் அவர்கள் ஒருவருடைய தொலைபேசியில் இருந்தும் அழைப்புக் கிடைக்கவில்லை.

இதனையடுத்து நேற்று முற்பகல் 10 மணியளவில் மீளவும் தொலைபேசி அழைப்பை எடுத்துள்ளார்.

அதன்போதும் அழைப்பு கிடைக்காததால், அருகில் உள்ள கடை உரிமையாளருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து, தனது சிறிய தாய்மாரிடம் இருந்து தொலைபேசி அழைப்புக் கிடைக்கவில்லை என்ற தகவலைக் கூறி, அவர்களைச் சென்று பார்க்குமாறு கேட்டுள்ளார்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர் பிரஸ்தாப வீட்டுக்குச் சென்று அவர்களை அழைத்துள்ளார்.

எனினும் வீட்டில் இருந்து எந்தப் பதிலும் கிடைக்காததால் வீட்டின் ஜன்னலைத் திறந்து பார்த்தபோது, அங்கு வெட்டுக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் ஐந்து பேர் இறந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர், பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் உயிரிழந்தவர்களின் நகைககள் களவு போனமை தெரிய வந்துள்ளது.

இதேவேளை நாகசுந்தரி என்பவரின் கணவரான கார்த்திகேசு என்பவர் 1985 மே 15ஆம் திகதி குமுதினிப் படகில் கொல்லப்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது. (ம)

# அடுத்த ஜனாதிபதியை தீர்மானிப்பது நாமே

## அத்துரலிய ரத்தன தேரர்

(கொழும்பு)

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யைத் தீர்மானிக்கப் போவது நாமே. இனிமேல் ஒருபோதும் ராஜபக்ஷ குடும்பத்தால் ஆட்சிக்கு வர முடியாது. அந்தளவுக்கு அவர்களால் நாடு வீழ்ந்துள்ளது" என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்.

"ராஜபக்ஷ குடும்பத்தினர் இனி 20 வீதத்துக்கும் குறைவான வாக்கு மட்டத்தில்தான் இருப்பார்கள். அவர்களது அரசியல் ஆதிக்கம் முடிந்துவிட்டது. அவர்களால் அரசியலில் அழுத்தம் மாத்திரம் கொடுக்க முடியும். தலைவர்களாக மாற முடியாது.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை எடுத்துக் கொண்டால் சவாலை ஏற்றுக்கொள்ளும் திறமை அவரிடம் இல்லை. இவர்களுக்கு வெளியே இருந்து அடுத்த ஆட்சி மலரப் போகின்றது.

நாட்டுப் பற்று தொடர்பில் சரியாகச் சிந்திக்கக்கூடிய எல்லாத் தரப்பினரையும் நான் ஒன்றிணைத்து வைத்துள்ளேன். பெரிய திட்டமே என்னிடம் உள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது நாம் அந்தத் திட்டத்துக்குள் நுழைவோம். எந்த அடிப்படையில் என்று எவரும் இப்போது கேட்க வேண்டாம். அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாக நாமே இருப்போம் எனத் தெரிவித்தார். (4)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 22/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1549
வெற்றி இலக்கங்கள்: துலாம் 2 9 5 0 6 9
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.04.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1124
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 06 23 30 77
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### கொவிசெத

திகதி 2023.04.22
சீட்டிழுப்பு இலக்கம் 3336
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 02 16 43 68
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 22/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1442
வெற்றி எழுத்து: Y சுப்பர் இலக்கம்: 22
வெற்றி இலக்கங்கள்: 17 22 31 74

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.22
சீட்டிழுப்பு இலக்கம் 403
வெற்றி இலக்கினம்: சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 30 35 56 59
சிம்மம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/04/22
சீட்டிழுப்பு இலக்கம் 5094
ஆங்கில எழுத்து: R
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 6 7 7 2 4 6
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2068
நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.04.22
தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: A 21 57 58 74
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,129,920/-
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

### சனிதா

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.22
சீட்டிழுப்பு இல : 4229
வர்ணம் : இளம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,563,120/-
வெற்றி இலக்கங்கள்: 38 53 58 62
ஆங்கில எழுத்து: H
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,594,521.60
திகதி 2023-04-22
வெற்றி வாரம் 3780
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள்: 10 24 30 46
மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,685,620/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 35 43 44 65 68
சுப்பர் இலக்கம்: 35
சீட்டிழுப்பு வாரம் 1244
வர்ணம் சிவப்பு
திகதி 2023.04.22 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 324,623,263.40
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சங்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்

| வெற்றி வாரம் | திகதி | வர்ணம் |
| --- | --- | --- |
| 588 | 2023-04-22 | செம்மஞ்சள் |

ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கங்கள்: 14 36 50
விதி எண்: 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 19,153,148/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB DEVELOPMENT LOTTERIES
தொ.பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1894
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.04.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,960,940/-
வெற்றி இலக்கங்கள்: 39 44 51 69
ஆங்கில எழுத்து: Z
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15311)

**076 755 8606**
**077 638 5683**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6369)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-23 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6369)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை
உடுக்கியவளை பிள்ளையார்
கோவிலுக்கு அண்மையில்
வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :

(15247)

**077 819 1314**

## காணி விற்பனைக்கு


கைதடி-நுணாவிலிலுள்ள (A9 வீதியில்) 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
பரப்பு ஒன்று 45 இலட்சம்.

**077 824 9234**
**077 839 5444**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- **பார்வையிடும் நேரம்** காலை 6 முதல் மாலை 6 வரை



**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.**

(15311)

**077 468 3354**
**076 911 9371**
**076 739 0413**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ். நாவற்குளி A9 வீதியில் இரண்டாம் காணி 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்பு உள்ள சூழல்
- நன்னீரூற்று
- 1 பரப்பின் விலை 650,000/- மட்டும்

**076 436 5814**
**077 065 4525**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## வீட்டுடன் காணி விற்பனை

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து 1 Km தூரத்திலும் பலாலி வீதி அம்மாச்சி உணவகம் முன்பாக 1/2 Km தூரத்திலும் கலட்டி முந்தல் வீதியில் 1 பரப்பு காணியில் அமைந்த வடக்கு வாசல் வீடு, மூன்று அறைகள்,சமையல் அறை ,குளியல் அறை மற்றும் வரவேற்பறை வசதிகளுடன் கூடிய ஓட்டு வீடு உடன் விற்பனைக்குண்டு.

**தரகர் தேவையில்லை. 2 கோடி 30 இலட்சம்**

**077 382 1140, 076 479 2012**

## பணியாளர் தேவை

**வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள வள்ளுவர் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை**

**1.பராமரிப்பாளர் (பெண்) Warden - 02**
- வயதெல்லை 25-50 வயது
- நல்ல உடல்,உள ஆரோக்கியம் இருத்தல்
- Child Care NVQ மொழித்தகைமை சான்றிதழ்
- தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்.

**2.உளவளத்துணையாளர் (பெண்) -01**
- உளவியல் துறையில் டிப்ளோமா/ பட்டம்
- வயதெல்லை 25-50
- தொழில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- பகுதி நேரமாகவோ தங்கியிருந்தோ கடமையாற்றலாம்

**3.ஏனைய பணிகள் -02**
- வயதெல்லை 25-50
- தொழில் அனுபவம் விரும்பத்தக்கது

(15338)

பணிப்பாளர்
**077 525 9513**

## வாகனம் வாடகைக்கு தேவை

பட்டா ரக வாகனம் மாத வாடகைக்கு தேவை



(15340)

**077 711 0329**
**077 245 4224**

## தரம் 6-11 மாணவர்களுக்கு

கணிதம், விஞ்ஞான பாடங்கள் வீட்டிற்கு வந்து அல்லது Zoom ஊடாக தமிழ், ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படும்

(15333)

**077 639 1935**

## வேலை வாய்ப்பு

Entrepreneurs Company இல் பல புதிய பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட உள்ளதால் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார்,வவுனியா,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து.வேலையாட்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

**பதவி**
அலுவலக சுத்திகரிப்பாளர், அலுவலகர் ,களஞ்சிய பாதுகாவலர், கணக்காளர் , முகாமையாளர்

**தகமை**
தரம் 9,10 ,O/L,A/L ,மேற்தகமையுடையோர்

**இணையும் முறை**
0772986763 எனும் இலக்கத்திற்கு உங்களது NIC இலக்கம் மற்றும்முழுப் பெயர் விலாசம் கல்வித்தகமை என்பவற்றை SMS செய்வதன் ஊடாகவோ அல்லது Whatsapp இன் ஊடாகவோ இணைய முடியும்.

(15334)

தொடர்பு கொள்ள
**077 298 6763** - 6.00 am தொடக்கம் 12.00 pm வரை
**077 062 1631** - 12.00 pm தொடக்கம் 6.00 pm வரை

## உடனடி வேலைவாய்ப்பு

**APSS International**
**பிரபல கல்வி நிறுவனத்திற்கு**

- Receptionist (வரவேற்பாளர்)
- Office Assistant
- Student Administrator
- IELTS Lecturer
- Spoken English Lecturer
- Spoken Sinhala Lecturer

(15299)

உங்கள் விண்ணப்பங்களை 7 நாட்களுக்குள் கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

Dr.Chalvan's Academy
chelvanbose@hotmail.com
**071 520 6642, 021 224 4666**

## Spoken Sinhala Classes

Duration - 6 Months
Week day's /Week end Classes
School Level - 12 Months
Advance Level - 6 Months

(15299)

**071 520 6642**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(15247)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

[illegible] Junction, Jaffna.
**[illegible] 074 007 1970**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 600 மீற். தூரத்தில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
அத்துடன் 80 அடி X 10 அடி நீளமுள்ள கோழிக்கூடும் (நிலக்கூடு) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
(15335)
**077 699 8683**

## மணமகள் தேவை

1979 இல் பிறந்த கனடா PR உடைய RC மண மகனுக்கு உடனடியாக மணமகள் தேவை

(C-6410)

**077 582 3434**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org